அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. போன் : 64166

உ

குன்றக்குடி

# அருள்தரு தோகையடி விநாயகர்

# துதிக்கை மாலை

ஆசிரியர்

குன்றக்குடி வைத்தியம்

மு. கணபதியா பிள்ளை



வெளியிடுவோர்

திருவருள் திரு தெய்வசிகாமணி

பொன்னம்பல தேசிக பரமாசாரிய

சுவாமிகள் அவர்கள்

உரைவிளக்கம் : வெளியீடு

வித்துவான் க. கதிரேசன், எம்.ஏ., பி.எட்

ஆதீனப் புலவர், குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் – 630 206.

உ

குன்றக்குடி

# அருள்தரு தோகையடி விநாயகர்

# துதிக்கை மாலை


ஆசிரியர்

குன்றக்குடி வைத்தியம்

**மு. கணபதியா பிள்ளை**


தவத்திரு அருள் நெறித்தந்தை
**குன்றக்குடி அடிகளார்** அவர்களின்
பொன்னார் திருவடிகட்குக் காணிக்கை
குன்றக்குடி : 31-10-98


வெளியிடுவோர்

திருவருள்திரு தெய்வசிகாமணி

**பொன்னம்பல தேசிக பரமாசாரிய**
**சுவாமிகள் அவர்கள்**

உரைவிளக்கம் : வெளியீடு

**வித்துவான் க. கதிரேசன்,** எம்.ஏ., பி.எட்

ஆதீனப் புலவர், குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் – 630 206.

அருள்தரு

# தோகையடி விநாயகர்

குன்றக்குடி

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம்
46 ஆவது குருமகா சந்நிதானம்
திருவருள்திரு தெய்வசிகாமணி
பொன்னம்பல தேசிக பரமாசாரிய
சுவாமிகள் அவர்கள்



குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம்
45 வது குருமகா சந்நிதானம்
திருவருள்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்

## உள்ளே....


1. தோரணவாயில்
2. வாழ்த்துரை : திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.
3. அணிந்துரை : முதுபெரும் புலவர் சிவநெறி வித்தகர் மு. சுந்தரேசம் பிள்ளை அவர்கள்
   த. த. பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத் துறைச் சிறப்பு நிலைப் பேராசிரியர்.
4. நூல்
5. செய்யுள் முதற்குறிப்பு

உ

# தோரண வாயில்

அருள்எனும் பொருள்பெறு வரமழை திருவடி
கடல்முகந்து நிலம்சிவ உதவுசெவ் இணைமலர்
அடியர் போகம் வந்தி சென்னி
சிந்தையாம் முற்றிய யானையின் சேர்த்துவாம்.

– செவ்வந்திப் புராணம்.

உலகியல், நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. தளராத நம்பிக்கை, அத்திசையில் நம்மைத் தூண்டிச் செலுத்தி வளர்க்கும். "திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற் பெருவாக்கும் பீடும் பெருக்கும்" என்கிற தளராத நம்பிக்கைத் தளத்தை அடிப்படையாகக் கொண்டு மலர்ந்து மணம் சேர்ப்பதே வழிபாடு. ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலாப் பரம் பொருள், உயிர்க்குலத்துக்கு அருள்புரியக் கொண்ட ஆயிரம் வடிவங்களுள் ஒன்று கணபதி வடிவம். இக்கணபதி, பரசிவத்தின் வேறாகாதவர் என்பது ஆன்றோர் நெறி.

குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமான் எழுந்தருளி அருள்வழங்கும் குன்றக்குடி மயின் மலை அடிவாரத்தில், இப்பெருமான்– அருள்தரு தோகையடி விநாயகர் என்ற திருப்பெயருடன் எழுந்தருளி அருள்பாலித்து வருகிறார். இப்பெருமானைச் "சிவோகமா சிந்தூரம்", "தோகையடியே குடியாக நின்றவன்", "குன்றைப் போற்றுவர்க்குச் சித்திக்கும் தோகையடி விநாயகன்", "சண்முகன்தன் துணைவன்" என்று தோகையடி விநாயகர் துதிக்கை மாலையாகிய இந்நூலின் ஆசிரியர் குன்றக்குடி மருத்துவம் மு. கணபதியா பிள்ளையவர்கள் போற்றுகிறார்.

இவர், ஈழத்துப் பிள்ளைமார் (இல்லத்துப் பிள்ளைமார்) மரபில் தோன்றி, மதுரையிலும் இராசபாளையம் அருகிலுள்ள பனையூரிலும் சிலகாலம் வாழ்ந்து, பின்னர் குன்றக்குடியே குடியாகக் கொண்டார். பனையூர் அருட்டிரு தட்சிணாமூர்த்தி சுவாமிகள் அவர்களிடம் தன் தந்தையாரைப் போலவே அளவற்ற ஈடுபாடு கொண்டவர். தந்தையார் முத்துசாமிபிள்ளை, சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர், மதுரை பெஞ்சு



மாஜிஸ்திரேட்டாக இருந்தவர், மதுர வைத்திய பண்டிதர், பின்னாளில் குன்றக்குடியில் தங்கியவர். தந்தைவழி, தனயனுக்கும் மருத்துவம் கைவந்த கலையானது. குன்றக்குடி அருள்தரு வீரமாகாளியம்மன் திருவருளுக்குப் பாத்திரராகி, ஆசு, மதுர, சித்திர, வித்தார கவிகள் இயற்றும் நாற்கவி விலாசராக விளங்கினார். இவரது நிறைகவியாற்றலைச் "சத்தப் பிரபந்தம்" (கி.பி. 1930 இல் வெளிவந்தது) என்கின்ற இவரது நூல்வழியறியலாம். சத்தப் பிரபந்தத்துள் ஒன்றான "அருள்தரு வீரமாகாளியம்மன் பாமாலை" என்னும் அரிய பத்திப் பனுவல் 31–5–1996 இல் விசாக விழாவில் திருவருள்கூட்ட நம் உரை விளக்கத்துடன் வெளிவந்தது.

இவ்வரகவியின் மற்றொரு அரிய நூல் அருள்தரு தோகையடி விநாயகர் துதிக்கைமாலை என்னும் இந்நூல். இது 31 கட்டளைக் கலித்துறைகளால் அந்தாதித் தொடையில் அமைந்தது. அணிந்துரை வழங்கியுள்ள என்னருமைப் பேராசிரியர் குறித்துள்ளவாறு ஒவ்வொரு பாடலும் ஆறு கூறுகளையுடையது. சொல், பொருள், நயங்கள் பொதுள பத்திச் சிறப்பும் ஒருசேரக் கொண்டது. அருள் மணக்கும் பொருள் பொதிந்த இந்நூலை இன்றைய நிலைக்கு ஏற்பச் சந்தி பிரித்து, கூட்டு முறை, குறிப்புரை, பொழிப்புரை, விளக்கம், இன்றியமையாத இலக்கணக் குறிப்பு, முடிப்புக் கூறல் என்கிற வகையில் தெளிவு படுத்த முயன்றுள்ளேன்.

என்னை இவ்வகைப் பணியில் ஈடுபடுத்தி வாழ்த்தியருளி, இன்று தோன்றாத் துணையாய் அருள்பாலிக்கும் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்குமுரிய அருள் நெறித்தந்தை 45 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் பொன்னார் திருவடிகட்கு என்மனம் மொழி மெய்யாலான பணிவன்பு கலந்த வணக்கங்களைச் செலுத்துகிறேன். அவர்கள் திருவடிகளில் இந்நூல் மலரைச் சொரிந்து காணிக்கையாக்குகிறேன்.

இவர்களது வழியில், என்னை வாழ்த்தி ஊக்குவிப்பதுடன், தமது பல்வேறு பணிச் சுமைகளுக்கிடையே இந்நூலுக்கு அரிய வாழ்த்துரை வழங்கியும் இந்நூலை வெளியிட்டும் சிறப்பித்துள்ள வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் வழிபாட்டிற்கும் உரிய 46 ஆவது குருமகாசந்நிதானம் திருவருள்திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாசாரிய

சுவாமிகள் அவர்களின் பொன்னார் திருவடிகட்கு என்மனம், மொழி, மெய்யாலான வணக்கங்களைப் பணிவன்புடன் செலுத்தி மகிழ்கின்றேன்.

தமது அறிவு அனுபவ முதிர்ச்சி காரணமான பல்வேறு பணிகளுக்கிடையே இந்நூல் முழுவதையும் ஆழமாகப் படித்துப் பார்த்து அணிந்துரை வழங்கி என்னை வாழ்த்தியுள்ள தண்டமிழும் வடமொழியும் வல்ல என் திருப்பனந்தாள் பேராசிரியப்பெருந்தகை முதுபெரும் புலவர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகச் சைவ சித்தாந்தத் துறைச் சிறப்பு நிலைப் பேராசிரியர், சிவநெறி வித்தகர். செந்தமிழ்ச் செல்வர் மு. சுந்தரேசம் பிள்ளை ஐயா அவர்கட்கு என் பணிவன்பு கலந்த நன்றியும் வணக்கமும் உரியன.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டுப்பெற்றுத்தந்த குன்றக்குடி சண்முகநாதன் அச்சகத்திற்கு என் நன்றி.

"புன்மொழிக் கடுக்கொளப் புகட்டினன்
இன்னருள் விழைகுவாய் இறும்பூ(து)உடைத்தே"

குன்றக்குடி
1 – 10 – 98

அடியவன்
வித்துவான். க. கதிரேசன், எம்.ஏ., பி. எட்,
குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனப் புலவர்.

உ
சிவ சிவ

## திருவருள்திரு தெய்வசிகாமணி
## பொன்னம்பல தேசிக பரமாசாரிய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர்)

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி – 630 206, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு
இ : குன்றக்குடி : 04577 – 64227. காரைக்குடி : 04565 – 23215

நாள் : 16–10–98

## வாழ்த்துரை

விநாயகப் பெருமான் அருள் எந்தச் செயலின் தொடக்கத்திற்கும் தேவை. செயல் அனுகூலம் அவனருளாலே வாய்க்கும். வினையின் நாயகன் விநாயகனே!

குன்றைக்குமரன் எழுந்தருளியுள்ள மயில் மலையின் தொடக்க வாயிலில் – தோகையடியில் விநாயகப் பெருமான் தோகையடி விநாயகனாகக் கோயில் கொண்டுள்ளான். சமயத் தமிழ் உலகத்தில் பாமரரும் உணரும் வண்ணம் அரிய தோத்திரக் கருவூலங்களுக்குத் தூய நல் உரை நல்கியவர் நம் ஆதீனப் புலவர் க. கதிரேசனார். அவர் பக்திக் கடலில் மூழ்கி எடுத்த முத்துக்கள் பல! அவற்றுள் மிகச் சிறப்பாகத் தோகையடி விநாயகர் பாமாலைக்கு அரிய உரையை நல்கியுள்ளார். அவரின் நுண்மாண் நுழைபுலம் பாராட்டுக்குரியது!

நோய்க்கு மருந்தாய், பசிக்கு விருந்தாய், நாடியோருக்கு நலம் தரும் ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் குன்றின் அடியில் எழுந்தருளியிருக்கும் தோகையடி விநாயகப் பெருமான் அருள் எண்ணி எண்ணி இன்புறத் தக்கது.

உலகு அறியாத் தோகையடி விநாயகர் பாமாலையைக் கல்லாரும் கற்றவரும் அறியும் வண்ணம் ஆற்றுப்படுத்திய நம் ஆதீனப் புலவர் க. கதிரேசனாருக்கு நெஞ்சு நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

இந்நூல் ஆக்கமாய் வெளிவர நல்லுதவி புரிந்த நம் சிவநெறிச் செம்மல் சிவத்திரு கி. பிச்சைக்குருக்கள் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி பாராட்டுக்கள்!

நல்லாசிகள்

# அணிந்துரை

முதுபெரும் புலவர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகச் சைவசித்தாந்தத்துறைச்
சிறப்புநிலைப் பேராசிரியர், செந்தமிழ்ச் செல்வர், சிவநெறி விற்தகர்

**மு. சுந்தரேசம் பிள்ளை**

நம் அன்பர், பழுத்த தெய்வத் தமிழ்ப் புலமையர், சிவச்சிர் பரப்புநர், குன்றையாதினப் புலவர், சைவமெய்த்திரு க. கதிரேசனார் அவர்கள் தொடர்ந்து தெய்வத் தமிழ்ப்பணி ஆற்றிவருகிறார்கள். குன்றையாதினத்தின் பெருமையினைப் பல்லாற்றானும் பரப்பி வருபவர்களுள் இவர் முதன்மையர். ஆதினத்தின் சார்பில் பல்வேறு நூல்களை ஆய்வு முறையில் வெளியிட்டு வருகிறார்கள். இவர்கள் தற்போது வெளியிட விரும்பும்நூல் "மூத்த நாயனார்" பற்றியது.

இந்நூல் குன்றக்குடி மலைக்கோயில் அடிவாரத்தில் குடிகொண்டுறையும் அருள்தரு தோகையடி விநாயகப் பெருமானது பெருமையினைப் பல்லாற்றானும் விளக்குவது. இதன் ஆசிரியர் குன்றக்குடி வைத்தியம் மு. கணபதியாப் பிள்ளையவர்கள். இவர்கள் இயற்றிய அருள்தரு தோகையடி விநாயகர் துதிக்கைமாலை என்னும் அருள் நூலுக்குக் குன்றக்குடியாதினப் புலவர் பெருந்தகை க. கதிரேசனார் அவர்கள் பண்டிதரும் பாமரரும் ஆர்வத்துடன் பயிலுதற்குரிய நிலையில் விளக்கவுரை வரைந்துள்ளார்கள். இவ்வுரை. இவரது சைவ சாத்திர, தோத்திரப் புலமையை நன்கு புலப்படுத்தியுள்ளது. சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட நூல்கள் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றுள்ளன.

சிற்றிலக்கிய வகைகளுள் முதன்மையுடையது மாலை இலக்கியம். தமிழில் அமைந்துள்ள மாலை இலக்கியங்கள் பலதுறையுடையன. பத்தித்துறை மாலை இலக்கியங்கள் நூற்றுக்கு மேற்பட்டன எனலாம். முதன் முதல் எழுந்த மாலை இலக்கியம், பட்டினத்தார் அருளிய "கோயில் நான்மணி மாலை"யாகும். அதனை முதலாகக் கொண்டு இன்றுவரை எழுந்த பத்தித்துறை மாலை இலக்கியங்கள் நூற்றுக்கு மேலாம். அவற்றுள் ஒன்று குன்றக்குடி அருள்தரு தோகையடி விநாயகர் துதிக்கை மாலையாகும். கட்டளைக் கலித்துறை யாப்பிலமைந்த இம்மாலை, முப்பத்தொரு பாடல்களையுடையது. ஒவ்வொரு பாடலும் ஆறுதலைப்பில் பகுக்கப் பெற்று விவரிக்கப் பெற்றுள்ளது.

சங்ககாலம் முதல் இன்றுவரை எழுந்த இலக்கியப் பாடல்களில் பல இவ்விளக்கவுரையில் இடம் பெற்றுள்ளன. இம்மாலையில் கண்ட சமயக் கதைகளை விளக்கியிருத்தல், அதோமுகன், விதேகன் முதலிய வடசொற்களை விளக்கியிருத்தல், வீயாத பிரமம் முதலிய தொடர்களுக்கு விளக்கம் இலக்கணக் குறிப்பு வரைந்து இருத்தல் முதலியன விளக்கவுரையாசிரியரின் பன்னூற் புலமையையும், பலதுறைப் புலமையையும் உள்ளங்கை நெல்லிக் கனி எனப் புலப்படுத்தும்.

இனி, இந்நூற் பாடு பொருள் விநாயகப் பெருமான். திருமந்திர ஆசிரியர் இப்பெருமானை "ஞானக்கொழுந்து" என்பர். "ஞானமரம் சிவபரம்பொருள். அம்மரத்திற் கிளைத்த கொழுந்தாம் விநாயகப் பெருமானை அருள்தரு தோகையடிவிநாயகர் துதிக்கை மாலை ஆசிரியர் – மு. கணபதியாப் பிள்ளையவர்கள் – வழிபடு கடவுளாகக் (ஆத்மார்த்த மூர்த்தி) கொண்டவராதலின் பரமாத்மா(7), வேதாந்தி(15), விளக்கொளி(18), கற்பகம்(19), அதோமுகன் (24), சிந்தூரம்(23), விற்பனன்(24), சித்திபுத்தி(27), சூரியன்(28), ஆரியன்(29), தபோதனன்(30) எனப்பல சொற்களால் புகழ்ந்துரைப்பர். இச்சொற்களுக்கும் இவைபோன்ற சொற்களுக்கும் விளக்கவுரையாளர் தரும் நயவுரைகள் அறிந்து மகிழ்தற்குரியன. இன்னோரன்ன பல சிறப்புகளையுடைய நூலும் உரையும் என்றும் நின்று நிலவுவதாக. நலம்.

திருப்பனந்தாள்
28 – 9 – 98

(ஒ–ம்) மு. சுந்தரேசம் பிள்ளை.



உ

# குன்றக்குடி
# அருள்தரு தோகையடி விநாயகர் துதிக்கை மாலை

ஆசிரியர் : குன்றக்குடி வைத்தியம்

## மு. கணபதியாபிள்ளை

விளக்கவுரை :

குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனப் புலவர்

வித்துவான். **க. கதிரேசன்,** எம்.ஏ., பி. எட்.

## கட்டளைக் கலித்துறை

### 1

| | | | | |
|---|---|---|---|---|
| முத்திக்கு | வித்தே | முடிவிலா | இன்பேமும் | மூர்த்திகட்கும் |
| தித்திக்கும் | தேனே | தெவிட்டாக் | கனியேஎன் | சிற்றறிவாம் |
| புத்திக்கும் | ஏற்ற | புதுவிருந் | தேகுன்றைப் | போற்றுவர்க்குச் |
| சித்திக்கும் | தோகை | அடிவாழ் | விநாயக | தேசிகனே. |

**கூட்டுமுறை :** குன்றை... தேசிகனே, முத்திக்கு... புதுவிருந்தே, திருவடிகட்கு வணக்கம், அருள்புரிக என்று வருவித்து முடிக்க.

**குறிப்புரை :** முடிவிலா இன்பு = பேரின்பம் – வீடுபேறு, வீடுபேறாவது பிறவித்துன்ப விடுதலையும், பேரின்பம் பெறுதலையும் குறிக்கும். விடுதல்–விடு–வீடு, பெறுதல்–பெறு–பேறு, வீடு, பேறு இரண்டும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள். குன்று = பெருமானின் ஊர்தியாகிய மயில், சாபத்தால் குன்றக்குடிக் குன்றானது, இது, இடவாகுபெயராய் அருள்தரு சண்முக நாதனைக் குறித்தது. சித்திக்கும் = வேண்டுவார் வேண்டியவாறே அருளும். தோகையடிவாழ் விநாயகன் = மயின்மலைத் தோகையடியில் – அடிவாரத்தில் எழுந்தருளி அருள்வழங்கும் அருள் தரு தோகையடி விநாயகர். தேசிகன் = ஞானப் பேரொளி வடிவினன்.

**பொழிப்புரை :** குன்றக்குடிக் குன்றாம் மயின் மலைமேல் எழுந்தருளி அருள்வழங்கும் : அருள்தரு சண்முகநாதப் பெருமானைப்

போற்றுகிறவர்களுக்கு, அவர்கள் வேண்டுவன வேண்டியவாறே அருள்வழங்கும் அருள்தரு தோகையடி விநாயகப் பெருமானாகிய ஞானப் பேரொளி வடிவினனே, முத்திப்பேற்றுக்கு வித்தாக விளங்குகிறவனே, முடிவில்லாப் பேரின்பமாக விளங்குகிறவனே, அயன், அரி, அரன் ஆகிய மூவரும் எண்ண இனிக்கும் தேனே, உண்ணத் தெவிட்டாத தீங்கனியே, என் சிற்றறிவாகிய புத்திக்கும் பொருத்தமான புதுமையான விருந்தே, உம் திருவடிகட்கு வணக்கம். அருள்புரிவாயாக.

**விளக்கம் :**

**முத்திக்கு வித்தே:** வித்தே, முளைத்துக் கிளைத்துத் தழைத்து மரமாகிப் பயன் தரும். வித்துள் மரம் அடக்கம். அதுபோல இப்பெருமானே தண்ணளி வழங்க வீடுபேறாக விளங்கி அதனைத் தன்னுள் அடக்கி நிற்பார் என்பது குறித்தது.

**மும்மூர்த்திகட்கும் தித்திக்கும்தேன் :** அயன், அரி ஆகிய இருவரும் பதமுத்தியினர். இவரோ பரமுத்தி வடிவானவர். எனவே அவ்விருவரும் பரமுத்திபெற வேண்டி இவரை எண்ணி மகிழ்தலின் தேன் எனக் குறித்தார்.

அரன் பரம் பொருளின் வடிவாய் அழித்தற்றொழில் செய்து பிற இரு தொழிற்கும் காரணமானவன். இவர் தம்நிலையில் பரம்பொருளை எண்ணி மகிழ்தலின் இவர்க்கும் தேன் என்றாராயிற்று.

தேன், உண்டார் நோய் தீர்த்தலும், ஆக்கம் தருதலும் ஆகிய இருநலம் செய்வது. அதுபோல, சிறப்பாக முன்னைய இருவர்க்கும் மலநீக்குதலும், பின்னையவர்க்கு ஆக்கந்தருதலும் ஆகிய இரண்டினையும் பரம்பொருளாம் இப்பெருமானே செய்தருளுதலின் மூவர்க்கும் இவர் தேனானார்.

**தெவிட்டாக்கனி :** நாவாற் சுவைக்கும் கனிகள், நம்பொறிவழி உடல் சார்ந்து நிற்பனவாதலின் தெவிட்டும். இவரோ நம்மனத்தாற் சுவைக்க உயிர்சார்ந்து நிற்பவராதலின் தெவிட்டாக் கனியாயினர்.

**என்புத்திக்கும் :** உம்மை இழிவு சிறப்பும்மை. எனக்கே புதுவிருந்தாயின், ஞானியர்க்கு எத்துணைச் சிறந்தவன் என்பது குறிப்பு.

**ஏற்ற :** பெண்ணம் பெரிய பொருளாயினும், எம் தகுதிக்கு ஏற்ப இவர்



இறங்கி அருள்புரிபவராதலின் இங்ஙனம் குறித்தார். கைக்குழந்தைக்குரிய சிறான வளர்ச்சிக்குத் தேவைப்படும் சத்துப் பொருளனைத்தையும் தாய், பக்குவப்பட்ட தாய்பாலாகத் தந்து வளர்க்கும் நிலையினை எண்ணுக.

**புதுவிருந்து :** உலக விருந்துகள், தனித்தனி ஒரு சில புலன்களுக்கே இன்பம் தருவன, அனுபவிக்க அனுபவிக்கத் தெவிட்டுதலும், உவர்ப்பும் ஏற்படுத்துவன, மிகின் நோய் செய்வன, உடலாக்கத்துக்கே உரியன. இவ்விருந்து போலாது, இப்பெருமானாம் விருந்து, ஐம்புலன்களாலும் ஆரத்துய்த்தல்; தெவிட்டாமை; உவர்ப்பின்மை; மிகினும் நோய் செய்யாது நலமே செய்தல்; உயிர்க்கு ஆக்கம் தந்து உயர்த்துதல் முதலியன தரும். ஆதலின் புதுமை அடைதந்தார்.

"ஐம்புலன்கள் ஆரத்தந்து" என்கிற மணிவாசமும்

"கோலம் அடிக்கடி புதிதாய்க் காட்டிநிற்கும்" என்கிற தி.மீ.சு. பிள்ளையவர்கள் வாக்கும் எண்ணத்தக்கன.

**முடிப்பு :** ஞானப் பேரொளி வடிவினனே, வித்தே, தேனே, கனியே, புதுவிருந்தே போற்றுகிறேன் அருள்புரிக.

## 2.

| | | | | |
|---|---|---|---|---|
| தேசிக | னேதிருத் | தேவாதி | தேவரும் | தேடியுண்டு |
| மூசிக | னேமுதல் | முக்கட் | பெருமான் | முகம்மலர்ந்த |
| கோசிக | னேகுரு | நாதக் | குழந்தாய் | குளிர்ந்தகுன்றைக் |
| காசுக | னேஅருள் | ஆனந்தத் | தோகை | அடிப்பொருளே. |

**கூட்டுமுறை:** குன்றைக் குளிர்ந்த காசுகனே; ஆனந்தத் ..... பொருளே; தேசிகனே... குழந்தாய் அருள் என்று கூட்டி முடிக்க.

**குறிப்புரை :** திரு = நலம், உண்டு = உள்ளத்தால் சுவைத்து, மூசு = மொய்க்கும். இகன் = இம்மையிலேயே அருள்கின்றவன், கோ = தலைமை. சிகன் = ஒளிவடிவினன். குரு = பெருமை. நாதன் = தலைவன். கா = சோலை. சுகன் = வருத்தமின்றி எழுந்தருளியிருப்பவன். ஆனந்தம் = முத்திப்பேறு.

**பொழிப்புரை :** குளிர்ந்த சோலைகளையுடைய குன்றக்குடியில் வருத்தமின்றி எழுந்தருளியிருப்பவனே; முத்திப்பேறாக விளங்கும்

அருள்தரு தோகையடி விநாயகப் பரம்பொருளே! ஞானப் பேரொளி வடிவினனே! நலம் கொண்ட தேவர்களும், அவர்களின் தலைவர்களும் தேடிவந்து மனத்துட் கொண்டு மேன் மேலும் உட்கொள்வதற்கு மொய்க்கவும், எமக்கு இம்மையிலேயே நலம் தரும் பெருமானே! சிவபரம்பொருளாம் முக்கட் பெருமான் முகம் மலரவந்த தலைமை வாய்ந்த ஒளிவடிவினனே! பெருமை பொருந்திய தலைமை வாய்ந்த குழந்தையே அருள்புரிவாயாக.

**விளக்கம் :**

**தேவரும்** – உம்மை உயர்வு சிறப்பும்மை – பசு புண்ணியம் மிகப் பெற்றவராதலின் தேவராயினர். உம்மை, எம்மனோரும் என்பதையும் அடக்கி நிற்பது.

**தேடி** : உலகப் பொருளனைத்திலும் ஒன்றாய் உடனாய் இருக்கும் நீ, தம்முள்ளும் ஒன்றாய் உடனாய் இருப்பதறியாத காரணத்தால் – மலவயப்பட்டதனால் – தேட வேண்டியவராயினர்.

**குருநாதக் குழந்தாய்** : பொதுவாக இத்தொடர் முருகப் பெருமானைக் குறிப்பதாயினும், ஆசிரியர் விநாயகப் பெருமானுக்குப் பொருத்த முறக் கையாண்டுள்ள நயம் சுவைக்கத்தக்கது.

**குன்றைக் குளிர்ந்தகா** : ஐம் புலன்களுக்கும் இன்பம் தரும் சோலையே பண்டைத் திருக்கோயில். அங்கு எழுந்தருளும் பெருமானும் ஐம்புலன்களும் ஆரத்தரும் பேரின்ப வடிவினன். ஆதலின் அவனை அங்குப் பண்டையோர் எழுந்தருளச் செய்தனர். அன்று சோலை சூழ்ந்த குன்றக்குடியாக விளங்கியமை குறிப்பது இத்தொடர். அந்நிலைபேண, நம் வணக்கத்திற்குரிய 45வது குருமகா சந்நிதானம் அவர்கள் – தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் – ஊருள்ளும் ஊர்ப்புறத்தும் மரங்கள் வைத்து வளர்த்ததும், அவை பலன் தருவதும் ஈண்டு எண்ணத்தக்கன.

**முக்கட் பெருமான் முகம் மலர்ந்த** : காரணப் பெயராகும் நிலையில் இது சிவபெருமானைக் குறிக்கும். காரண இடுகுறியாய் நிற்கும் நிலையில் விநாயகரைக் குறிக்கும். எனவே சிவபெருமான் முகம் மலர வந்த என்று கொள்ளினும், இவ்விநாயகரே முக்கட் பெருமானாய் முகம் மலர்ந்து விளங்கும் என்று கொள்ளினும் அமையும்.



**முடிப்பு** : தேசிகனே, இகனே, கோசிகனே, குழந்தாய் காசுகனே அருள்.

**3.**

| | | | | |
|---|---|---|---|---|
| அடியார் | அடிதொழும் | பாக்கியமே | ஏழைக்(கு) | அருள்புரிந்தால் |
| படியான | திற்பல | செல்வமும் | துய்த்துப் | பரமுத்தியும் |
| நொடியாமுன் | வந்தெய்தும் | என்(று)உல | கீர்ஒன்று | நோற்றுளம்இக் |
| கடியார | தோகை | அடிஆரும் | எங்கள் | கணபதிக்கே |

**கூட்டுமுறை** : உலகீர் அடியார் அடி..... வந்தெய்தும் என்று கடியார தோகை.... எங்கள் இக்கணபதிக்கே ஒன்று நோற்றுளம் என்று கூட்டி முடிக்க.

**குறிப்புரை** : படி = உலகு. பரமுத்தி = சிவசாயுச்சியம் = மேலான முத்திப் பேறு. கடியாரம் – வட்டப்புள்ளி.

**பொழிப்புரை** : உலகத்தவரே! அடியார்க்கு அடித்தொண்டு செய்யும் பெரும் பேற்றை எளியவனாகிய எனக்கு அருள்புரிந்தால், இவ்வுலகில் பலவகைப்பட்ட செல்வத்தையும் அனுபவித்தபின், சிவசாயுச்சியமும் ஒரு நொடிக்குள் வந்து சேருமாதலால் வட்டப் புள்ளியுடைய தோகைபெற்ற மயிலின் வடிவாகிய இக்குன்றின் அடிவாரத்தில் எழுந்தருளி அருள் வழங்கும் எங்கள் கணபதிக்கு நாம் ஒன்றிய மனத்துடன் நோன்பு நோற்றுள்ளோம். எனவே இவரருள் அன்பர்பணி செய்ய எம்மை ஆளாக்கும்! பேறுகள் எல்லாம் பெறுவோம்.

**விளக்கம் :**

**அடியார்.... பாக்கியம்** :

"அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரி" – திருவாசகம்.

"அன்பரொடு மரீஇ" – சிவஞானபோதம்.

..... " அடியார்க்கும் அடியேன்" – சுந்தரர்.

முதலியன அடியார் கூட்டச் சிறப்பை வலியுறுத்தும். குரு, இலிங்க, சங்கமம் என்ற முத்திற வழிபாடுகளுள் சங்கம வழிபாடு – அடியார் அடிதொழும் பாக்கியமாகும்! மும்மலம் கழுவுதல், திருவருட் பேற்றைத் தக்கவைத்துக் கொண்டு வளர்த்துக் கொள்ளுதல் என்பன அடியார் இனமும், அவரடித் தொழும்பும் தருவன வாதலின் இதனைப் பாக்கியம் என்றார்.

**ஏழைக்கு** : பெறவேண்டுவென பெறாமையும், பெற்றும் துய்க்க வேண்டுவன துய்காமையும் ஏழ்மை நிலை. இம்மையில் பல வகைச் செல்வத்துய்ப்பும், மறுமையில் பரமுத்தித்துய்ப்பும் அப்போது தமக்கின்மையால் தமக்கு இல்லையே என்று இவர் தம்மை இங்ஙனம் குறித்தார்.

**பல செல்வம்** : "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே". எப்பொருளாயினும் உடையான்கண் இன்பத்துக்கு வழிகோலுதல், ஆக்கந்தருதல் இவை இரண்டும் தருமாயின் செல்வம் ஆகும். பிறவெல்லாம் பிற. பேறுகள் பதினாறு என்பது வழக்கு. அவை,

"கல்வி, நன் மக்கள், செல்வம், கவின் மதி, இளமை, வாழ்நாள், நல்வினை, பெருமை, தேற்றம், நலிவின்மை, வலிமை, வெற்றி, நெல், இசை, நுகர்ச்சி என்னும் பதினாறு பேறும் சேர்ந்து சொல்லரும் குமரன் பொற்றாள் துணை கொண்டு வாழ்க நன்றே" – ஞானப் பேழை II. பக்.53.

**துய்த்து** : இப்பேறுகள் பெறுதல் மட்டும் சிறப்பன்று. இவற்றைத் துய்த்தல் – அனுபவித்தல் வேண்டும். எனவேதான் முன் காட்டிய பதினாறு பேறுகள் பற்றிய பாடலில் நுகர்ச்சி – துய்ப்பு இறுதியில் கூறப்பெற்றது. முன்கூறப்பெற்ற பேறுகளை அனுபவிக்கும் நிலையிலேயே அவை பேறாகும் என்பது குறிப்பு. இக்குறிப்பினதே துய்த்து என்பதும்.

**நொடியாமுன் வந்தெய்தும்** : அடியார் அடிதொழும் இம்மைப் பேறும், பரமுத்தியுமாகிய இரண்டும் நொடியாமுன் வந்தெய்தும் என்று ஈரிடத்தும் கூட்டுமாறு அமைந்த தொடரிது.

**முடிப்பு** : அடியார் அடிதொழும் பாக்கியம் பெற எங்கள் இக்கணபதிக்கு தோற்றுளம். எனவே இருமைப் பேறும் வந்தெய்தும்.

## 4.

| | | | | |
|---|---|---|---|---|
| பதிக்கே | வருகிலன் | பாப்பாடி | ஒதிலன் | பத்தர்புகழ்த் |
| துதிக்கே | இசைகிலன் | தூர்க்குணம் | போக்கிலன் | துக்கநவ |
| நிதிக்கே | அலைந்து | நினைமறந் | தேன்எற்கு | நீஇரங்காய் |
| கதிக்கே | மயின்மலைத் | தோகை | அடிவாழ் | கஜாநனனே. |

**கூட்டுமுறை** : மயின்மலை... கஜாநனனே! பதிக்கே... எற்குநீ கதிக்கே இரங்காய்.



**குறிப்புரை** : பதி = குன்றக்குடித் திருத்தலம். துர்க்குணம் = கீழ்க்குணம். நவநிதி = ஒன்பான் செல்வம். கதி = வீடுபேறு. எற்கு = எனக்கு.

**பொழிப்புரை** : மயின்மலை அடிவாரத்தில் எழுந்தருளி அருள் வழங்கும் யானை முகப் பெருமானே, உன்னை வழிபட உன் திருத்தலத்திற்கு யான் வரவில்லை; வந்தேனாயினும் உன் புகழ்ப் பாக்களைப் பாடவோ ஓதவோவில்லை; உன்னடியார் புகழ்கூறும் துதிகளைச் சொல்லவும் இல்லை; கீழ்க்குணங்களையும் போக்கிக்கொள்ளவில்லை; துக்கமேதரும் ஒன்பான் செல்வங்களையும் தேடியலைந்து, இன்பமே தரும் செல்வமாகிய உன்னை மறந்தேன். ஆயினும் உழலும் எனக்கு இரங்குவாயாக; அருள்புரிவாயாக.

**விளக்கம்** :

**பாடி ஓதிலன்** : பாடுதலும் ஓதுதலும் காதலாகிக் கசிந்து நிகழ்த்துதற்குரியன. பாடுதல், வாய்விட்டு "அலறிடேன் உலறிடேன் ஆவிசோரேன்" என்றவாறு நிகழ்வது. ஓதுதல், தான்மட்டும் உணரும் வண்ணம் உச்சரித்தல். நடுங்கா மனத்துடன் ஒதுதலினும் நடுங்காமனத்துடன் பாடும் நிலையில், பொறிபுலன்கள் தறிகெட்டு ஓடுதல் குறைவாதலின் பாடுதலை முன்வைத்தார். இவ்விருவகையினும் கடினமானது தியானித்தல். இதனைச்

"சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத" –
என்கிற திருப்புகழ்த் தொடரால் அறியலாம்.

**நவநிதிக்கே அலைந்து** : ஏகாரம் தேற்றம் குறித்தது. நல்வாழ்வுக்கு இன்றியமையாத பிறவற்றைப் பற்றி எண்ணியும் பாராமை. உயிரின் ஈடேற்றத்துக்குரிய எதையும் எண்ணிப் பாராமை குறித்தது.

நவநிகளாவன. கச்சப, கற்ப, சங்க, பதும, நந்த, நீல, மகா, மகா பதும, முகுந்த நிதிகள் என்பர்.

**நினைமறந்தேன்** : உம்மை தொக்கது. மறக்கக் கூடாதவன் நீ என்பது குறிப்பது. நிதிக்கே யலைந்ததால் அதனை இயற்றல், ஈட்டல், காத்தலில் பொழுதைக் கழித்ததால் மறந்தார். நிதியை வகுத்தலும் மறந்தேன் என்பது எச்சம்.

**துர்க்குணம் போக்கிலன்** : குணத்தின் வழியது செயல். துர்க்குணமாதலின், பதிக்கு வராமை, பாப்பாடாமை, ஒதாமை, பத்தர் புகழ்த் துதிக்கே இசையாமை என்கிற நலமல்லாக் குணங்களும் சேர துர்க்குணம் போகாததாயிற்று. செய்யக்கூடாதது செய்தல், செய்ய வேண்டுவன செய்யாமை ஆகிய இரண்டுக்கும் காரணம் துர்க்குணமே யாதலின் அவை இரண்டிற்கும் இடையில் இதனை வைத்தார்.

**நீ எற்கு இரங்காய்** : திரா நோய் தீர்த்தருளும் நீ தாயிற் சிறந்த தயாவான தத்துவன். என் நிலையாம் உண்மையுரைத்த என்மீது "நான் உண்மையுரைத்தேன்" என்கிற ஒரு காரணம் பற்றியாவது இரங்கு. துர்க்குணம் போக்கு. நற்குணம் சேர்த்து நலம் நல்கு என்கிற குறிப்பினது.

**முடிப்பு** : உடன் பாட்டானும் எதிர்மறையானும் நான் ஒத்துக் கொண்ட என் பிழைக்கே இரங்கி வேசறுவேனை விடுதிகண்டாய், கைவிடாது கரையேற்று.

## 5.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனை | முகப்பெரு | மான்என்(று) | உவந்(து)அருச் | சித்தஅன்பர் |
| ஏனையர்க் | கும்பர | மானந்த | வாழ்வை | எளிதில்அளித்(து) |
| ஊனை | யுடைப்பிறப் | பாம்மால் | ஒழித்(து)அறி(வு) | ஓங்குகணச் |
| சேனைய | தோகை | அடிவாழும் | ஏரம்ப | சின்மயனே. |

**கூட்டுமுறை** : கணச் சேனைய.. சின்மயனே; ஆனை முகப்... ... ஏனையர்க்கும், ஊனையுடைப் பிறப்பாம் மால் ஒழித்து, அறிவு ஒங்கு பரமானந்த... எளிதில் அளித்தாய் எனக்கும் அருள் என்று முடிக்க.

**குறிப்புரை** : கணச்சேனை = பதினெண் கூட்டம். ஏரம்பர் = விநாயகர். சின்மயன் = விநாயகன் – ஞானவடிவினன். மால் = மயக்கம்.

**பொழிப்புரை** : பதினெண் கூட்டத்தவரும் வணங்கும் தலைவனே; மயின் மலைத் தோகையடிவாரத்தில் எழுந்தருளியுள்ள ஞான வடிவனே, உன்னை ஆனைமுகப் பெருமான் என்று உள்ளுவந்து அருச்சித்தவர்க்கும், உள்ளுவந்த ஏனையர்க்கும் ஒத்த நிலையில் ஊனுடம்பாகிய பிறவி மயக்கம் ஒழித்து, ஞானம் ஒங்கும் பேரின்பப் பெருவாழ்வை எளிதில் அளிப்பாய். எனக்கும் அருள்புரிக.



**விளக்கம்** :

**உவந்து அருச்சித்த அன்பர்** : வழிபாட்டில் முதன்மைபெற வேண்டுவது உள்ளுவப்பே – ஈடுபாடே ஆதலின் உவப்பை முன்வைத்தார். அருச்சித்தல் என்பது இன்றைய அருச்சனையைக் குறிப்பதாக அமையுமாயின் "அர்ச்சனை பாட்டேயாகும்" என்பதை எண்ணலாம். ஆயினும் உள்ளுவந்த வழிபாடே அருச்சனை என்பதை, "மண்டு காதல் அருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலார்" – என்று சண்டீசநாயனார் புராணத்துள் சேக்கிழார் பெருமான் அருளுவதை எண்ணும் நிலையில் தடுத்தாட்கொண்ட புராணத்துள் வரும் இச் சொல்லுக்கும் வழிபாடு என்று கொள்வதே நேரிது என்பது புலனாகும்.

**ஆனைமுகப் பெருமான்** : இது அவன் திருவுரு. இவன் அவன் என்றபடி வைக்கும் முழு நம்பிக்கை குறித்தது.

**ஏனையர்க்கும்... அளித்து** : உம்மை இறந்தது தழுவிஎச்ச வும்மையாய் வந்து அருச்சித்த (வழிபட்ட) அன்பரைத் தழுவி நின்றது. இங்கு ஏனையர் என்றது இழிந்தவரையன்று; உவந்த நிலையில் வழிபடாது "ஏனோதானோ" என்று வழிபாட்டாரைக் குறிப்பது. இந்நிலையில் இவரை நொதுமலர் அல்லது ஏதிலார் அல்லது அல்லவர் என்பர். இத்தகு அல்லவர்க்கும் அருள்புரிபவன் பெருமான். காரணம், மருந்தை விரும்பியுண்டாலும், விருப்பமின்றியுண்டாலும் அது உரிய பயனைத் தந்தே திருமாதலின். இதனை,

உயர்ந்தவரும் அல்லவரும் ஒங்கியதன் நோக்கால்
பயந்தழுவின் ஒப்பர்எனல் பாரைஅறி வித்தாங்(கு)
இயைந்தமக வான்மகளோடு ஏனல்வளர் மாதும்
புயந்தழுவ நின்றபுனி தற்(கு)அடிமை செய்வாம்.

– பூவாளூர்ப் புராணம்
– கச்சியப்ப முனிவர்

என்பதாலறியலாம். அல்லவர் என்றது இங்கு உயர்ந்த வரல்லாத வரைக்குறிப்பதன்றி இழிந்தவரைக் குறியாமை காண்க.

**பிறப்பாம்மால்** : "ஆணவமான படலம் கிழித்து மெய்ஞ்ஞானக் கண் பெற" வாய்த்தது நந்நமக்கு ஈதோர் பிறவி என்று பிறப்பைக்

கொள்ளாது. ''பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கி ''மேலைப் பிறவிக்கு வித்தாய் அமைத்துக் கொள்வார் நிலை குறிப்பதாயிற்று இத்தொடர்.

**முடிப்பு :** உன்னை உவந்து அருச்சித்தார்க்கும் ஏனையோர்க்கும் பிறவி ஒழித்துப் பரமானந்தம் அருளும் நீ, ஏனையர் – நொதுமலார் – நிலையில் வைத்து என்னை ஆள்க.

## 6.

| | | | | |
|---|---|---|---|---|
| சின்னஞ் | சிறுவய | தாள்மலை | பெற்றதோர் | செவ்விசெல்வி |
| பொன்னும் | தொழும்பதப் | போதகம் | அன்னாள்தன் | புத்திரனே |
| மன்அஞ் | சனக்கண் | மயில்போன்ற | வல்லபை | மார்புறச் சேர்த்(து) |
| உன்னும் | தபோதனத் | தோகை | அடிவாழும் | உண்மையனே. |

**கூட்டுமுறை :** சின்னஞ்.... புத்திரனே, அஞ்சனக் கண்.... சேர்த்து மன் உன்னும்.... உண்மையனே அருள் என்று கூட்டி முடிக்க.

**குறிப்புரை :** மலை = செறிவு, செவ்வி = அழகு, பொன்= திருமகள், போதகம் = பெண்யானை, மன் உன்னும் = நிலையாக நினைக்கும் – ஒருமுகப்பட்டு நினைக்கும், உண்மை = மெய்ஞ்ஞானம்.

**பொழிப்புரை :** மிக இளையவளாகிய செறிந்த அழகுடைய திருமகள் தொழும் திருவடிகளையுடைய பெண்யானை யொப்ப நடக்கும் பராசக்திக்கு மகனே; மை தீட்டப்பெற்ற கண்களுடையவளும் மயிலின் சாயலுடையவளும் ஆகிய வல்லபையைத் தன் மார்போடு அணைத்தும் தவத்தையே நிலையாக நினைப்பவனே தோகையடி வாழும் ஞான வடிவினனே, என் மனத்தையும் தவத்தில் நிலை நிறுத்த அருள் புரிக.

**விளக்கம் :**

**சின்னஞ் சிறுவயதாள் :** அதிட்டித்து (நிலைப்படுத்தி) நிற்கும் நிலையில் அநாதியான பராசக்தியை நோக்க இவள் – திருமகள் – மிக இளையவனாதலின் சின்னஞ்சிறு வயதாயினள். இவளுக்கு மூத்தவள் சேட்டையாம் மூதேவியாதலின் அவளுக்கு மிக இளைய இவளை இங்ஙனம் கூறினார் எனினும் அமையும்.



**பொன்னும் தொழும் :** உம்மை உயர்வு சிறப்பும்மை. உலகோர் அனைவரும் தேவர்களும் தொழும் என்பது குறிப்பு. திருமகள் சின்னஞ்சிறியவளாதலின் பென்னம் பெரிய இவர் அவளால் தொழத்தக்கவராயினர்.

**வல்லபை :** போரில் அசுரர் தலைகளை அறுத்துத் தள்ளத்தள்ள வல்லபையிடமிருந்து அசுரர் படை தோன்றிய வண்ணம் இருந்ததால் மாயையாம் இவளைத் தன் தொடைமீது அமர்த்தி அசுரர் வெளிப்படும் வழியடைத்தார் என்பர். வல்லபை, விநாயகரின் சக்திகளில் ஒருத்தி. உமாதேவியின் அம்சமாக யமுனை ஆற்றங்கரையிலமைந்த பொய்கையொன்றின் தாமரையில் குழவியாகக் கிடந்தாள். மரீசி முனிவர் எடுத்து வளர்த்தார். உரிய பருவத்தில் சிவபெருமானுக்கு மணமுடிக்க எண்ணித் தவம் செய்தார். தவமுடிவில் தோன்றியவரை வேண்ட, அவர் விநாயகர் வடிவுடன் வந்து வல்லபையை மணந்தார் – மதுரைத் தமிழ்ச் சங்க அகராதி II பக். 535.

**வல்லபை... தபோதனனே :** பெருமான் வல்லபையை அணைத்திருந்தும் தபோதனனாய் இருப்பது,
மங்கையோ டிருந்தேயோகு செய்வானை – என்கிற திருமுறைப் பகுதியை நினைவூட்டும்.

**முடிப்பு :** வல்லபையோடிருந்தும் யோகு செய்கிறவனே, மலைமகள் மகனே; தவநிலைபெற எனக்கும் அருள்புரிக.

## 7.

| | | | | |
|---|---|---|---|---|
| உண்மை | அறிந்தவர் | உள்ளே | விளங்கும் | ஒரு வெளியாம் |
| வண்மை | மகாத்துமா | வாவா | முனம்புன | வள்ளிஎன்ற |
| பெண்மயில் | வேலவர் | பேரில்அன் | பாகப் | பிறங்கிநின்ற |
| தண்மயில் | தோகை | அடிவாழும் | ஞானத் | தவநிலையே. |

**கூட்டுமுறை :** முனம் தண்புன... தவஞான நிலையே; உண்மை... வாவா.

**குறிப்புரை :** புனம் = தினைக் கொல்லை, முனம் = முன்னம் – இடைக் குறை, பிறங்கி = (யானை வடிவில்) விளங்கி, வண்மை = அழகு, மகாத்துமா = பரமஞானி.

பொழிப்புரை : முருகப் பெருமான் வள்ளியை மணம் புணர வந்தபோது, குளிர்ச்சிமிக்க தினைக் கொல்லை காத்த வள்ளிமயில், வேலன் மீது அன்பு கொண்டு அணையுமாறு யானைவடிவில் விளங்கி நின்று, மயின்மலை அடிவாரத்தில் எழுந்தருளி அருள்வழங்கும் மேலான ஞான நிலையினனே, ஞானிகள் உள்ளத்தில் விளங்கும் ஒப்பற்ற ஞானாகாசமாய் விளங்கும் அழகிய பரமஞானியே, அருள விரைந்துவருக.

விளக்கம் :

**ஞானத் தவநிலை** : வேலவர் பொருட்டு யானைவடிவில் வந்தாரேனும் எய்துதற்கரியர், எளியரல்லர், மேலான ஞானமே வடிவினர் என்க.

**புனம்... அன்புஆக** : தினைப்புனம், யானை, மயில், வேல், வேடன் என்கிற இயைபு எண்ணி மகிழ்தற்குரியது. தினைப்புனத்தே மயில் திரிவதும், வேடன் அதனைப் பிடிக்க வருவதும், வேடனை மயில் கண்டு வெருவுவதும் இயற்கை. மயில், வேடன் மீது அன்புடையதாக வேண்டி, மயிலுடன் காட்டில் வாழும் யானை வந்தது என்கிற நயம் எண்ணி மகிழ்தற்குரியது.

**வண்மை மகாத்துமா** : "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல... ... கல்வியழகே அழகு". இவனோ கல்வியறிவின் மிகமிக மேலான ஞானவடிவினன். இதனான் மட்டுமின்றி, அந்த ஞானத்தைப் பிறர்க்கு வழங்கும் அழகும் உடையவன் ஆதலின் வண்மை – அழகு – அடைதந்தார்.

**வாவா** : அடுக்குத்தொடர். விரைவு குறித்தது.

முடிப்பு : தவஞான நிலையே, வண்மை மகாத்துமா அருளவாவா.

## 8.

| | | | | |
|---|---|---|---|---|
| நிலையற்ற | வாழ்வினை | நித்தியமாய் | எண்ணி | நீள்நிலத்(து)ஆழ் |
| அலையுற்ற | புன்துரும்(பு) | என்(று)அலைந்(து) | எய்த்தும்ஓர் | ஆதரவற்(று) |
| உலையுற்ற | ஆமையா | யான்படும் | பா(டு)அற | ஒடிவந்(து)ஆள் |
| தலையுற்ற | தோகை | அடிவாழ்த்து | வார்க்(கு) | அருள்தந்தவனே. |

கூட்டுமுறை : தலையுற்ற.... தந்தவனே, நிலையற்ற.... வந்து ஆள்.



குறிப்புரை : ஆழ் = அழிக்கும், உலை = அரிசி பெய்தற்கமைந்த உலைநீர், தலை = பெருமை, ஆள் = ஆண்டருள்க.

பொழிப்புரை : பெருமை பொருந்திய மயின்மலை அடிவாரத்தில் எழுந்தருளியுள்ள உன்னை வாழ்த்துவோர்க்குத் திருவருள் புரிகிறவனே, நில்லாத உலகியல்பை நிலையாகக் கொண்டு இவ்வகன்ற உலகில், அழிக்கும் அலையிடைப்பட்ட அற்பத்துரும்பாக நான் பலவாறு அலைந்து எய்த்தும், ஒப்பற்ற ஓராதரவுமின்றி அரிசி பெய்ய அமைத்த உலையிடைப் பட்ட ஆமை போன்று நான் படும் துன்பம் தீர என்முன் நீ ஒடிவந்து ஆள்க.

விளக்கம் :

**நிலையற்ற வாழ்வு** : "ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்" என்பது போன்ற இம்மை இன்பம் நிலையாமை, புல்லாகிப் பூடாய்... எல்லாப் பிறப்பும் மாறிமாறிச் சுழன்று பிறத்தல் குறித்தது.

**ஆழ்அலை** : எற்றுதல், மேலுயர்ந்து சுருண்டு ஆழ்த்தி அமுக்குதல், மோதுதல் முதலியவற்றால் அழிக்கும் கடல் அலை. இவ்வலையிடைப் பட்ட புன்துரும்பு, கல்பொருது இறங்கும் மல்லற் பேரியாற்று நீர்வழிப் படூஉம் புணையின்நிலை யுறும் என்பதை நினைப்பித்தார்.

**உலையுற்ற.... பாடு** :

"... உலையை ஏற்றித் தழல்எரி மடுத்த நீரில்
திளைத்து நின்று ஆடுகின்ற ஆமைபோல் அறிவிலாதேன்"
– அப்பர். குறைந்த திருநேரிசை. 6.

"குளிர்ந்த நீரில் கிடந்து மரத்துப் போன ஆமை, தொடக்கத்தில் வெதுவெதுப்பான நீரில் திளைக்கும், அவ்விளைஞ் சூட்டினை நின்று அனுபவித்து மகிழும், ஆடி மகிழும். நேரமாக நேரமாக உலைநீர் சூடு ஏற ஏற அதுபடும் பாடு சொல்லும் தரத்ததன்று. அதுபோன்று, உலகியலைத் தொடக்கத்தில் இன்பமாகக் கருதித் திளைத்து, நின்று ஆடி மகிழும் உயிர், போகப் போகத் துன்பம் பெருகப் பெருக நடுக்குறும் – துன்புறும்".—

45 ஆவது குருமகா சந்நிதானம், தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

**ஓர் ஆதரவற்று :**

ஓர் = ஒப்பற்ற, உலகில் உணவு தருவார், உடை தருவார், நோய நீக்குவார் என்று ஆதரவு தருவோர் பலர். இவர்கள் ஆதரவு இப்பிறவிக்கேயுரியது; அதிலும் தற்காலிகமானது; நிலையானதும் ஒப்பற்றதும் ஆகாது. கேவலம், சகலம், சுத்தம் என்ற மூவகை நிலைகளிலும் ஆதரவாகவே நின்று உயிரைப் பேணும் பெருமான், ஒன்றாயும், உடனாயும் வேறாயும் நின்று ஆதரவு அருள்கின்றான். அவன் ஆதரவே ஒப்பற்ற ஆதரவு என்பது குறிப்பிட ஓர் – ஒப்பற்ற – என்ற அடை தந்தார். அவனே "தனித்துணை".

**ஓடிவந்து ஆள் :** மறைந்தன்றி வெளிப்பட்டும், வெளிப்படும் நிலையிலும் கூட என் துன்பம் மிகுமுன் விரைந்தும் வந்து ஆள்க என்பது குறிப்பு. படும்பாட்டின் நிலை குறித்து விரைந்து வரவேண்டுவது இது.

**முடிப்பு :** வாழ்த்துவார்க்கு அருள் தந்தவனே; அலைந்தும், எய்த்தும் ஓர் ஆதரவற்றேன்; ஓடிவந்து ஆள்க.

## 9.

| | | | | |
|---|---|---|---|---|
| தந்தம் | தரளம் | சிகைமே | கம்அம்பகம் | சத்திஉடல் |
| சந்தம் | திருமுகம் | தாமரை | கைகாந்தன் | தாள்தளிர்வாய் |
| சிந்தும் | பவளம் | தனம்ஓங்கல் | என்(று)இசை | தேவிபெற்ற |
| இந்(து)அந்தத் | தோகை | அடியானைப் | பாடல் | இனி(து)இனிதே |

**கூட்டுமுறை :** ஆற்றொழுக்கு.

**குறிப்புரை :** தந்தம் தரளம் = பற்கள் முத்து. அம்பகம் = திருக்கண். சத்தி = திருவருள். சந்தம் = சந்தனம். சிந்தும் = ஒளி சிந்தும். ஓங்கல் = குன்று. இந்து = நிலவு.

**பொழிப்புரை :** பல்முத்து, கூந்தல்மேகம், திருக்கண் திருவருள், திருமேனி சந்தனம், திருமுகம் தாமரை, திருக்கைகாந்தள், திருத்தாள் தளிர், திருவாய் ஒளி சிந்தும் பவளம், திருமார்புகள் குன்று என்று புகழப் பெற்ற பராசத்தி பெற்ற நிலவாக விளங்கும் தோகையடிப் பெருமானைப் பாடுவது மிகமிக இனியதாகும்.

**விளக்கம் :** இனிது இனிது – அடுக்குத் தொடர். மிகு மகிழ்ச்சி குறித்தது.



**முடிப்பு :** அன்னை பராசத்தியின் திருமகனாம் தோகையடிப் பெருமானைப் பாடுதல் மிக மிக இனிது.

## 10.

| | | | | |
|---|---|---|---|---|
| இனிதாம் | கதலிக் | கனிஅவல் | அப்பம்எள் | ஏற்றருள்வான் |
| தனியாம் | கயமுகத் | தார்வேந்த | தாமரைத் | தாள்தொழல்விட்(டு) |
| அனியாய | மாய்அலை | கல்லாத | பொல்லா | அசடனுய்யத் |
| தொனியாய | தோகை | அடிநாய | காஒன்று | சொல்லுவையே. |

**கூட்டுமுறை :** தொனியாய... நாயகா; இனிதாம்... உய்ய ஒன்று சொல்லுவையே என்று கூட்டுக.

**குறிப்புரை :** தொனியாய = பத்தி முழக்கத்துக்கு இடனாகிய, கதலி = வாழை. கயமுகம் = யானைமுகம். அலைகல்லாத = அலைய மாட்டாத. உய்ய = ஈடேற. சொல்லுவை = உபதேசிப்பாயாக.

**பொழிப்புரை :** பத்தி முழக்கத்துக்கு இடனாகிய மயின்மலைத் தோகையடி விநாயகப் பெருமானாம் தலைவனே; அடியவர் காணிக்கையாம் இனிய வாழைக்கனி, அவல், அப்பம், எள் உருண்டை முதலியவற்றை ஏற்றருள்கின்ற ஒப்பற்ற யானை முகமுடைய மாலையணிந்த வேந்தனே; உன் தாமரைத் திருவடிகளை வணங்கி உய்தி பெறுவதைக் கைவிட்டு, அநியாயமாக அலைய முடியாத பொல்லாத அசடனாகிய நான் ஈடேற ஒப்பற்ற ஞான நிலையை உபதேசித்தருள்க.

**விளக்கம் :**

**இனிதாம்கதலி... எற்றருள்வான் :**

"வாழைக் கனிபல வின்கனி மாங்கனி யாம்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம்எள் உண்டைஎல் லாம்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும் புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர் மேனி விநாயகனே"

– திருமூத்தநாயனார் திரு இரட்டை மணிமாலை – 4

"கைத்தலம் நிறைகனி அப்பமொ(டு) அவல்பொரி...."

–திருப்புகழ்.

என்பன ஒப்பு நோக்கத்தக்கன.

**பொல்லா அசடன் :** செய்தற்குரிய செய்யாதவன் அசடன். செய்தற்குரிய செய்யாமையுடன், செயற்குரிய வல்லாதன செய்வான் பொல்லா

அசடனாம். நின்தாமரைத்தாள் தொழுதல் முதலாம் இனிய உளவாக, இன்னாதனவாம் பிறவற்றுக்கே அநியாயமாய் அலைந்ததால் எய்த்தவன் பொல்லா அசடனாயினன்.

**தொனியாய** : தானே உணர்ந்து உன்னை வழிபட்டிருத்தல் வேண்டும். அன்றி, அடியவர் பத்தி முழக்கம் செய்து ஈடேறுவதைக் கேட்டும் கண்டுமாவது அந்நெறி பின்பற்றி ஈடேற வேண்டும் என்பதைக் குறிப்பால் புலப்படுத்துவது.

**ஒன்று சொல்லுவை** : "கரும்பிருக்க இரும்பு கடித்து" அலைந்து எய்த்த நான் "உன்னையல்லாதில்லை எங்கள் உத்தமன்" என்கிற உன்நிலை உணர்ந்ததுடன், என் நிலையும் உணர்கிறேன். உண்மை நிலை உணரும் என்னை ஒதுக்காது உபதேசித் தருள்க என்று வேண்டுகிறார்.

**முடிப்பு** : வேந்தே, உன் திருவடி தொழல் விட்டு அநியாயமாய் அலைந்து எய்த்த பொல்லா அசடனாகிய நான் உய்ய உபதேசித்தருள்க.

## 11.

| | | | | |
|---|---|---|---|---|
| சொல்லும் | திருஇமை | யாசல | வெற்பில் துணைமணிக்கொம்(பு) | |
| எல்லும் | பரவஒன்(று) | ஆய்ந்(து)ஒர் | கதையை | எழுதிஅன்பர் |
| இல்லும் | பெரியோர் | இடமும்தன் | வீடாய் | இருப்பவனே |
| அல்லும்செல் | தோகை | அடிவாழும் | எங்கள் | அறி(வு)உருவே. |

**கூட்டுமுறை** : எங்கள் அல்லும்செல்.... உருவே, சொல்லும்... வெற்பில் மணித்துணை.... பரவ கதையை ஆய்ந்து ஒன்று எழுதி, அன்பர்... இருப்பவனே அருள் என்று முடிக்க.

**குறிப்புரை** : அல்லும் செல் = மயக்கம் திரும். சொல் = புகழ். மணி = அழகு. எல் = ஒளி. ஒன்று = ஒற்றைக் கொம்பு. ஓர் கதை = மாபாரதம். இல் = இடம். இடம் = பெருமை.

**பொழிப்புரை** : எங்கள் மயக்கம் தீர்வதற்கு இடமாகிய மயின்மலைத் தோகையடியில் எழுந்தருளியுள்ள ஞானத்தின் திருவுருவே, புகழ்வாய்ந்த பனி மலையில் அழகிய இருதந்தங்களின் ஒளிபரவ இருந்து, ஒப்பற்ற மாபாரதக் கதையை ஆய்ந்து ஒற்றைக் கொம்பால் எழுதி அன்பர்களின் உள்ளமாகிய இடத்தினையும், ஞானிகளின் பெருமையையும் வீடாகக் கொண்டு இருக்கின்றவனே, அருள் புரிக.



**விளக்கம்** :

**அல்லும்செல் தோகையடி** : "தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தரும்" பெருமான் அருள்தரு சண்முகநாதப் பெருமான். அவனது திருவருள் இன்பத்தை அனுபவிக்க மயக்கம் தீர்தல் வேண்டும். இக்குன்றேறும் அன்பர், இக்குன்றின் அடிவாரத்தை யடைந்த அளவிலேயே அவனது திருவருள் இன்பம் துய்க்க வாய்ப்பாக அவ்வடிவாரத்திலேயே மயக்கம் தீர்வர் என்ற குறிப்பினது.

அல்லும் செல் என்பதிலுள்ள எச்சவும்மை பிற தீங்குகளும் திரும் என்பதுணர்த்தியது.

**ஓர்கதையை எழுதி** : வியாசபாரதம் 8800 சுலோகங்களையுடையது என்பர். மேலும் சிலர் ஒரு இலட்சம் சுலோகங்களை யுடையது என்பர். இக்கதையை வியாசர் கூற விநாயகர் எழுதியதை

பகைகொள் துரி யோதனன்பி றந்து
படைபொருத பாரதம்தெரிந்து
பரியதொரு கோடுகொண்டுகண்ட – வரைமீதே
பழுதற வியாசன்அன்று இயம்ப
எழுதிய விநாயகன்

– திருப்புகழ்

என்பர் அருணகிரியார்.

மாபாரதம் எழுத ஒடித்த கொம்பு, பாச ஞானம் குறித்தது என்பர்.

**அன்பர் இல்** : "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்" ஆதலின் அன்பர் மனம் இவர் வீடானது.

**பெரியோர் இடம்** : "பெருமையால் தம்மை ஒப்பார்" (பெரிய புரா–) பெரியோராதலின் தன்னொப்பில் அவர்பெருமை, இவர் உறையும் திருவிடம் ஆயிற்று.

**முடிப்பு** : அறிவு உருவே, ஓர் கதையை எழுதி இல்லும் இடமும் வீடாய் இருப்பவனே அருள்புரிக.

## 12.

| | | | | |
|---|---|---|---|---|
| அறி(வு)அதற்(கு) | எட்டா | அதீதநிர்த் | தொந்த | அநாதிமுத்த |
| குறிகுணம் | அற்(று)ஒளிர் | வாச | மகோசரம் | கூ(டு) அறி(வு)இல் |
| வெறியரைக் | கூடி | விருதா | அலையும் | வினைவிடுமோ |
| பொறியுறும் | தோகை | அடிநாய | காஎனாப் | புல்லனுக்கே. |

**கூட்டுமுறை :** அறிவு... வாச; பொறியுறும்... புல்லனுக்கே, மகோசரம்... வினை விடுமோ என்று முடிக்க.

**குறிப்புரை :** அறிவு = பசு, பாச அறிவு. அதித = மேம்பாடுடையவனே. நிர்த்தொந்த = மலக்கட்டில்லாதவனே. முத்த = கடவுளே. குறி = வடிவம். வாச = வாழ்பவனே. மகோசரம் கூடு = மக + உசரம் + கூடு = மிகஉயர்வு கொண்ட. விருதா = நற்பயனின்றி.

**பொழிப்புரை :** பசு, பாச ஞானங்களுக்கு எட்டாத மேம்பாடு உடையவனே; எக்காலத்தும் மலக்கட்டில்லாதவனே; கால எல்லை கடந்த கடவுளே; ஒரு வடிவமும் ஒரு குணமும் இன்றி ஒளிவடிவாய் வாழ்பவனே, மிக்க உயர்வு கொண்ட அறிவு சிறிதும் இல்லாத பித்தருடன் கூடி நற்பயனின்றி அலையும் புல்லனாகிய எனக்கு இருவினை விடுமோ? – நேராகுமோ? நேராக்கியருள்க.

**விளக்கம் :**

**அறிவு அதற்கு எட்டா அதீத :**

"அறிவுக்கு அறிவாகி அவ்வறிவுக்கு எட்டா
நெறியிற் செறிந்த நிலை நீங்கி" – கந்தர் கலிவெண்பா.

**குறியும்... ஒளிர்வாச :**

"குறியும் குணமும் ஒரு கோலமும் அற்றுஎங்கும்
செறியும் பரம சிவமாய்" – கந்தர் கலிவெண்பா.

**புல்லன் :** வெறியரைக் கூடுதல், அவரோடுவிருதா அலைதல் இவற்றால் நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்றாதல் போல அறிவு திரிந்து; காலம் இடம் காசுபணம் ஆகிய எந்த ஒரு தேவையுமின்றி, நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் பெருமானை ஏத்த வாய்ப்பிருந்தும் அது செய்யாமை பற்றிப் புல்லன் என்றார்.

"செய்தக்க அல்ல செயக் கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்"

– என்ற திருக்குறளை ஈண்டு எண்ணுக.



**தோகை அடிநாயகா என்னா :** உயிராவணம் இருந்து உற்றுநோக்கி உள்ளக் கிழியின் உரு எழுதும் நிலைக்கு முதற் படியாய் அமைவது மனவொருமை. இதற்குரிய எளிய இனிய வழி வாய்விட்டுப் பாடுதல். இதனை;

"படிக்கின்றிலை பழநித்திருநாமம்.....
முருகா என்கிலை....." – கந்தரலங்காரம் – 75.

"என்புருகிப் பாடுகின்றிலை" – திருவாசகம்.

"அலறிடேன் உளறிடேன் ஆவிசோரேன்" – திருவாசகம்.

முதலிய அருளாளர் வாக்குகளால் உணரலாம்.
இம் முதற் படிநிலையே இத்தொடருள் சுட்டப் பெறுகிறது.

**முடிப்பு :** அறிவுக் கெட்டாதவனே, மலமில்லாதவனே, அநாதி முத்தனே, குணம் குறி கடந்தவனே, வெறியரைக் கூடியலையும் நான் உன்னை அழைக்கவும் கூடவில்லை. எனினும் என்வினை வீழ்த்தல் உன் கடன்; அருள்புரிக.

## 13.

| | | | | |
|---|---|---|---|---|
| புல்லாகிப் | பூடாய்ப் | புவிஎலாம் | ஆகியே | பூத்துநிற்கும் |
| இல்லாகி | ஏகவெளியாகி | இங்(கு)அங்(கு) | எனா(து) | இரண்டற்(று) |
| உல்லாச | மாய்நிறைந்(து) | ஒங்கார | வட்டத்(து) | உதித்ஒடுங்கும் |
| சொல்லாகித் | தோகை | அடிவாழ் | சுகானந்த | சோதியனே. |

**கூட்டுமுறை :** ஆற்றொழுக்கு

**குறிப்புரை :** பூத்து நிற்கும் = பொலிவோடு விளங்கும். இல் = இடம். இரண்டற்று = அவையேயாய், தானேயாய்,அவையே தானேயாய். உல்லாசமாய் = பேரின்ப வடிவாய். சொல்ஆகி = புகழின் வடிவாகி.

**பொழிப்புரை :** புல்லும் பூடுமாக, உலகப் பொருள்கள் எல்லாமாக, பொலிவோடு விளங்கும் இடமாக, பரவெளியாக, அண்மை சேய்மை என்கிற இடவரையின்றித் தானேயாகவும், பொருள்களேயாகவும், தானும் பொருள்களுமாகவும் இரண்டற்ற நிலையில் பேரின்ப வடிவாக, ஓங்கார வட்டத்துள் தோன்றி ஒடுங்கும் புகழாக விளங்கித் தோகையடி வாழும் சுகமும் ஆனந்தமுமாகிய ஒளிவடிவானவனே அருள்புரிக.

**விளக்கம் :** பூடு – புண்டு என்பதன் இடைக்குறை.
திருவாசகம் சிவபுராணத்துள்வரும் "புல்லாகிப் பூடாய்.. " என்கிற பகுதி உயிரின் பிறப்பு வகை குறிப்பது. இங்கு, இறைவன் தங்கியிருக்கும் நிலை குறிப்பது.

**இங்கு.... நிறைந்து :**

"அங்கு இங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி" – தாயுமானவர்.

என்பதை நினைப்பிப்பது.

"அவையே தானேயாய்" – சிவஞானபோதம். 2.

**ஓங்கார வட்டத்து உள் ஒடுங்கும் சொல் :**

"ஓங்காரத்து உள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு"
– கந்தரலங்காரம் 55.

அகரமென அறிவாகி உலகம் எங்கும்
அமர்ந்துஅகர உகரமக ரங்கள் தம்மால்
பகரும்ஒரு முதல்ஆகி வேறும் ஆகிப்
பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில்பொருள் நான்கினையும் இடர்தீர்ந்து எய்தப்
போற்றுநருக்கு அறக்கருணை புரிந்து அல்லார்க்கு
நிகரில்மறக் கருணைபுரிந்து ஆண்டு கொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்
– விநாயக புராணம்.

என்பன இங்கு எண்ணத்தக்கன.

**முடிப்பு :** உலகெங்கும் இரண்டற்று, ஓங்காரத்து உதித்து உள்ளொடுங்கும் தோகையடிவாழ் சுகானந்த சோதியனே அருள்க.

## 14.

| | | | | |
|---|---|---|---|---|
| சோதிப்(து) | என்னைஇந் | நாள்மட்டும் | உன்னடி | தோத்தரித்தும் |
| ஒதிப் | பலதரம் | போற்றிசெய் | தேன்உண்மை | ஒங்குகதி |
| ஆதிப் | பதப்புணை | தந்தருள் | வாய்குன்றைத் | தோகையடிப் |
| பாதிப் | பிறைமதி | யான்பெற்ற | மாமுகப் | பாலகனே. |

**கூட்டுமுறை :** உண்மை ஒங்கு.... பாலகனே, இந்நாள்..... செய்தேன், சோதிப்பது என்னை? அருள்க என்று முடிக்க.



**குறிப்புரை :** மா = விலங்கு – யானை. உண்மை = ஞானம்.
கதி = பேரின்பம். ஆதி = ஆதாரம்.

**பொழிப்புரை :** குன்றக்குடி மயின்மலைத் தோகையடியில் எழுந்தருளி என்றும் அருள் வழங்குகின்ற, பிறைசூடிப் பெம்மான் பெற்ற யானைமுகத்து என்றும் இளைய விநாயகப் பெருமானே, இந்நாள்வரை உன் திருவடிகளையே தோத்தரித்தும் ஒதியும் போற்றினேன், எனினும் என்னைச் சோதிப்பதேன்? மிக்குச் சோதிக்க வேண்டா. பிறவிப் பெருங்கடல் கடந்து பேரின்பக்கரை சேர ஆதாரமாக உள்ள உன் திருவடிப்புணை தந்தருள்க.

**விளக்கம் :**

**இந்நாள்.... செய்தேன் :**

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்.
– என்கிற அற்புதத் திருவந்தாதி எண்ணத்தக்கது.

**பதப்புணை :** பதப்புணை என்பதால் பிறவிக்கடலும் பேரின்பக் கரையும் வருவிக்கப்பெற்றன.

தோணி, நாவாய் போன்றன அலையாலும் காற்றாலும் எற்றுண்டும் மோதுண்டும் சிதைந்து தம்மைத்துணை கொண்டார்க்குத் துன்பம் தருவன. புணைமரமோ எதனாலும் சிதையாது எக்காலத்தும் மிதந்து தன்னைப் பற்றியவரைக் கரைசேர்ப்பது ஆதலின் திருவடியைப் புணை என்றார்.

**பாதிப்... பாலகன் :** அடைக்கலம் புகுந்த அம்புலியைக் காத்தவன் உன்தந்தை. தந்தையறிவு மகனறிவு. உன்னை அடைக்கலம் புகுந்து உன்னருளால் இங்கு வைகி, ஒதித் தோத்தரித்துள்ளேன், ஆதலின் காத்தருள்க என்பது குறிப்பு.

**முடிப்பு :** பிறைமதியான் பாலகனே, இந்நாள் மட்டும் ஒதித் தோத்தரித்துப் போற்றினேன், உன் பதப்புணை அருள்க.

## 15.

பாலப் பருவ பரமத யாளனே பார்ஒருங்கும்
வேலப் பரும்புகழ் வேதாந்தி யேதிரு நீறுவிளை
கோலப் பிரானே குணமாகு குன்றாக் குடியுடையாய்
நாலத்த தோகை அடிவாழ் நரசுர நாயகனே.

**கூட்டுமுறை :** பாலப்பருவ– பார், வேலப்பரும் ஒருங்கு புகழ்... நாயகனே, அருள் என்று முடிக்க.

**குறிப்புரை :** வேதாந்தி = வேதத்தின் முடிபொருளானவன். கோலம் = அழகு. நால் அத்த = தொங்கும் கை – துதிக்கையுடையவனே. குணம் = அனுகூலம்.

**பொழிப்புரை :** பாலப்பருவத்தனே, மிகமேலான கருணையை ஆள்பவனே, உலகும், உடம்பிடி ஏந்திய முருகப் பெருமானும் ஒருசேரப் புகழும் வேதத்தின் முடிபொருளானவனே, திரு நீற்றால் விளையும் அழகுடைய தலைவனே, அனுகூலம் உண்டாக்கும் குன்றக்குடித் தலத்தனே, தொங்கும் துதிக்கையுடையவனே, இவ்வுலகவர்க்கும் தேவர்களுக்கும் தலைவனாய் மயின்மலைத் தோகையடியில் எழுந்தருளியிருக்கின்றவனே அருள்புரிக.

**விளக்கம் :**

**பரமதயாளன் :** யாரும் தன்னிடம் உள்ளதையே ஆளுதற்குரியர். மேலான தயை – கருணை வடிவானவர் பெருமான் ஆதலின் தயை ஆள்பவன் – தயாளன் எனப் பெற்றார்.

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்" என்பார் திருவள்ளுவர். ஒன்றின் ஒன்று உயர்ந்ததாக விளங்குவனவற்றுள் தயையை – கருணையை ஒக்கவும் உயர்ந்ததும் பிறிதில்லை. எனவே தயைக்குப் பரம்–மேலான் என்ற அடைதந்தார்.

**பார்... புகழ் :** புகழ்வாரின் கீழ் எல்லை பார் – உலகு. மேல் எல்லை வேலப்பர். எனவே அனைவரும் என்பது அடக்கம். நரர்சுரர் நாயகன் என்றதும் இங்ஙனமே கொள்ளத்தக்கது.

**வேதாந்தி :** வேதத்தின் முடிந்த முடிபொருளாக விளங்குகின்றவர் பரசிவம். இத்தோகையடி விநாயகப் பெருமான் பரசிவத்தின் வேறானவரல்லர் என்ற குறிப்புடையது.



**குணமாகு குன்றாக்குடி :** உளம், வளம், புலம், வலம், நலம் என்று வேண்டுவார் வேண்டுவதே ஈவான் அருள்தரு சண்முகப் பெருமான் ஆதலின் அனுகூலன். (குணம் = அனுகூலம்)

**முடிப்பு :** பரமதயாளனே, அனைவரும் ஒருசேரப் புகழும் கோலனே. வேதாந்தியே, நாலத்தனே நரசுர நாயகனே அருள்புரிக.

## 16.

நாயனே தன்னை அறிஞானி போற்று நளினபதத்
தூயனே என்றும் தொழுவார் வினைமலம் தூள்படுத்(து)உ
பாயனே எல்லாம் பரவடி வாய்த்திகழ் பண்புரைத்த
நேயனே தோகை அடியே குடியாக நின்றவனே.

**கூட்டுமுறை :** ஆற்றொழுக்கு

**குறிப்புரை :** நாயன் = பெருமையிற் சிறந்தவன். (நாயன்மார் என்பது உயர்வுகருதிய "மார்" பெற்றது). நளினம் = தாமரை. தூள்படுத்து = அழித்து. உபாயன் = எளியன். பரவடிவு = பரம்பொருள் வடிவம். நின்றவன் = நிலைபெற்றவன்.

**பொழிப்புரை :** பெருமையிற் சிறந்தவனே, தன்னுணர்வாராகிய ஞானிகள் போற்றும் தாமரைபோன்ற திருவடியனே, தன்னடி தொழும் அடியார் வினைமலத்தை அழித்தருளும் எளியனே, அனைத்தும் பரம்பொருள் வடிவம் என்பதை உலகறியச் செய்த அன்பனே, மயின்மலையின் தோகையடியைத் தன் நிலையான இருப்பிடமாகக் கொண்டு நிலைபெற்றவனே, அருள்க.

**விளக்கம் :**

**தன்னை அறிஞானி :**

நான்ஆர்; என் உள்ளம்ஆர்; ஞானங்கள் ஆர்
என்னை யார் அறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்

– திருவாசகம்.

என்று தன் விசாரணையில் தலை நிற்போர்.

**வினைமலம்.... உபாயன் :**

இதனை,

கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தள் சடைமேல் – பணங்கொண்ட
காதகத்த தேன்முரலும் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள் பணியப் போம்.

திரு. 11 – மூத்தநாயனார் திரு இரட்டைமணிமாலை.

என்பதாலும் அறியலாம்.

"ஒரு மொழி ஒழிதன் இனங் கொளற் குரித்தே" – என்பது இலக்கணம். ஆதலின் வினைமலம் தூள்படுத்து உபாயன் என்றதை ஆணவமலம் தூள்படுத்து உபாயன், மாயாமலம் தூள்படுத்து உபாயன் என்றும் கொள்க.

**நளினபதம்** : நீருடைக் குளத்தில் இருப்பதும், அந்நீர் காரணமாகவே அங்கு வாழ்வதும், அங்குள்ள அழுக்கை அழிப்பதும், தானிருக்கும் இடத்துக்கு மணமும் பொலிவும் சேர்ப்பதும் நளினம் – தாமரை.

ஈர உள்ளத்தில் இருப்பதும், அந்த ஈரம் காரணமாகவே அங்கு வாழ்வதும், உள்ளத்தழுக்கைத் தீர்ப்பதும், தானிருக்கும் உள்ளத்துக்கு உயர்வும் பொலிவும் சேர்ப்பதும் பதம்–திருவடி– இவ்வொற்றுமைகளை உள்ளடக்கியது இவ்வுவமத் தொகைத் தொடர்.

**எல்லாம்.... பண்பு** : அண்டமும், அண்டப் பொருள்களும் அவன் வடிவு; இது பெருமான் "ஒன்றாய்" விளங்கும் திருக்காட்சியை உரைப்பது. மேலும், "தந்தைவலத் தால்அருள்கைக் கனியோனே" என்கிற புராண வரலாற்றை – அம்மையப்பரை வலம் வந்து விநாயகர் கனிபெற்ற புராணவரலாற்றைச் சுட்டுவது.

முடிப்பு : தலைவனாய், தூயனாய், எளியனாய், நேயனாய் உள்ளந் அருள்புரிக.

## 17.

| | | | | |
|---|---|---|---|---|
| நின்றே | வணங்கிலன் | நிட்டைசெய் | பெட்பிலன் | நீக்கமற்ற |
| ஒன்றே | தெரிந்திலன் | உள்ளம் | தெரிந்திலன் | ஓதைகொண்ட |
| மன்றே | புகுந்திலன் | மாபாவி | யாநான் | மலைப்ப(து)அற |
| வென்(று)ஏக | தோகை | அடியாய்நி | சானந்தம் | ஈவதுவே |

கூட்டுமுறை : தோகைஅடியாய், நின்றே... வென்றுஏக, நிசானந்தம் ஈவதுவே என்று முடிக்க.



குறிப்புரை : நின்றே = மனத்தை ஒருநிலைப் படுத்தி. நிட்டை = சிந்தித்துத் தெளிந்த பொருளை உறுதியாய்ப் பற்றி நிற்பது. பெட்பு = விருப்பம். ஓதை = அடியார் வழிபாட்டு ஆரவாரம். மன்று = பொதுவிடம் – திருக்கோயில். மலைப்பது = மயங்குவது. அறவென்று = முழுதும் வென்று. ஏக = ஒருநிலைப் பட்டதான. நிசானந்தம் = நிச + ஆனந்தம் = உண்மை இன்பம்– பேரின்பப் பெருவாழ்வு.

பொழிப்புரை : அருள்தரு தோகையடிப் பெருமானே; என்மனத்தை ஒருநிலைப்படுத்தி நான் உன்னை வணங்கவில்லை; நிட்டை கூடும் விருப்பமும் இல்லை; பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிற்கின்ற உன்னைத் தெரிந்து கொள்ளவும் இல்லை; என் மனப்போக்கினையும் தெளியவில்லை; மாபாவியாகிய நான் மயங்குகின்றேன். என் மயக்கம் முழுவதையும் நான் வென்று நிற்க, ஒரு நிலைப் பட்டதான பேரின்பப் பெருவாழ்வை நீ தருவது என்று? இப்போதே தந்தருள்க.

**விளக்கம் :**

**நின்றே வணங்கிலன்** : வழிபாட்டில் முதன்மையானதும், இறுதிவரை அகத்தியமானதும் அலைபாயாத மனஒருமையே ஆதலின் வணக்கத்திற்கு, நின்று என்பதை அடையாக்கினார்.

**செய்பெட்பு** : ஆழமான விருப்பம், விருப்பம் ஆழமானதாயின்– அடிமனத்திலிருந்து எழுந்ததாயின் அது திண்ணியதாய் நின்று எண்ணிய எண்ணியாங்கு எய்துவிக்கும் என்பது அன்றைய உலகப்பொது மறை நெறியும் இன்றைய உளவியல் கருத்துமாகும்.

இது தன்வாழ்வில் அன்றோ,இன்றோ, இனி என்றுமே இல்லை என்பதை உணர்த்தும் குறிப்பு மொழியாக முக்காலத்துக்கும் ஒத்த வினைத் தொகையாய் செய்பெட்பு என்றார்.

**உள்ளம் தெளிந்திலன்** : மனத்தெளிவு எனக்கிருக்குமாயின் உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காத்து என் உள்ளத்தையும் காத்திருப்பேன்; தெளிவு ஏற்பட்டிருக்கும்; அதற்கும் வழியில்லை என்ற குறிப்பினது

**ஓதை... புகுந்திலன்** : "போற்றி என்றும் புகழ்ந்தும் புரண்டு நின்று ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கும்" ஓசை நிறைந்த திருக்கோயில்

சூழ்வதற்கு எனக்குத் தடைஏதுமில்லை, ஏனெனில் அதுபொதுவிடம்- மன்று. அங்குச் சென்றிருப்பின் "நிலத்தியல்பால் நீர் திரிந்து அற்றாதல்" போல என்னறிவும் நல்லடியார் இனத்தியல்பதாக நான் ஈடேற வழிபிறக்கும், ஆயின் அதுவும் செய்திலன் என்றார்.

**மாபாவி :** பிறிதோருயிர்க்குத் தீங்கு செய்கிறவனைப் பாவி என்பது உலகியல். இங்ஙனம் குறிக்கப்பெறும் பாவி, தனக்குத்தானே தீங்கு செய்து கொள்வதில்லை. பாவிபோலன்றித் தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளும் வழி இருக்கவும், தனக்குத் தானே கேடு சூழ்ந்து கொண்டதால் மாபாவி என்றார்.

**மலைப்பது :**

"செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
ஐயம் அறாஅர் கசடுஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே"

– புறநானூறு

என்றபடி அன்றுவரை வந்த தன் மலைப்பினைக் குறித்தார்.

**முடிப்பு :** பெருமானே உயிர்க்கு ஊதியமான ஒன்றும் செய்திலன், எனினும் நான் "என்பிழை" இது என்பதை உணர்ந்தவன். இவ்வொரு தகுதி நோக்கியாவது அருள்புரிக.

## 18.

| | | | | |
|---|---|---|---|---|
| ஈயாத | லோபியர்க்(கு) | இன்பா | இயற்றி | இதயம்அஞ்சா |
| மாயாத | வாபுல | வாஅரிச் | சந்திரா | மன்மதனும் |
| தோயாத | வாவெனச் | சொல்லுநிர் | மூடத் | துயர்அகற்று |
| வீயாத | தோகை | அடிவாழ் | பிரம | விளக்கொளியே. |

**கூட்டுமுறை :** தோகை அடி வாழ் வீயாத பிரம விளக்கொளியே, ஈயாத... அகற்று என்று முடிக்க.

**குறிப்புரை :** மாயாதவா = மிகச் சிறந்த திருமாலே. தோயாதவா = ஒப்பாகாதவனே. நிர்மூடத்துயர் = முழுமூடத்தனத்தால் வரும் துயரம். வீயாத = எஞ்ஞான்றும் கெடாத. பிரமம் = சிவம்.



**பொழிப்புரை :** மயின்மலை அடிவாரத்தில் எழுந்தருளியிருக்கும் எஞ்ஞான்றும் கெடாத பரசிவமாம் விளக்கொளியே, பிறர்க்கு யாதொன்றும் ஈயாத உலோபியரை நாடிச் சென்று, இனிய பாக்களை அவர்மீது இயற்றி, அவற்றில் அவரை இதயம் அஞ்சாத திருமாலே, அறிவிற் சிறந்த புலவனே, உண்மையில் அரிச்சந்திரனே, மன்மதனும் ஒப்பாகாத அழகனே என்று புகழ்ந்து பாடும் முழுமூடத்தனத்தால் விளைந்த துயரத்தை அகற்றி, உன் மெய்ப்புகழே பாட அருளுக.

**விளக்கம் :**

**ஈயாத.... சொல்லும்**

"மிடுக்கி லாதானை வீமனேவிறல்
விசய னேவில்லுக்(கு) இவனென்று
கொடுக்கி லாதானைப் பாரி யேஎன்று
கூறி னும்கொடுப் பாரிலை" – சுந்தரர்

"கல்லாத ஒருவனையான் கற்றாய் என்றேன்
காடறியும் வேடனைநா டாள்வாய் என்றேன்
பொல்லாத ஒருவனையான் நல்லாய் என்றேன்
போர்முகத்தை அறியானைப் புலியே என்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனையான் வள்ளல் என்றேன்
இல்லாது சொன்னேனுக்(கு) இல்லை என்றான்
யானும்என் குற்றத்தால் ஏகின் றேனே".
தனிப்பாடல் திரட்டு – இராமச்சந்திர கவிராயர்.

என்பன போன்ற உலகியலை நினைவூட்டுவது இத்தொடர்.

**நிர்மூடத் துயர் :** இல்லாத உயர் பண்புகளை இருப்பதாகக் கூறும் நிலையில், உரியவர் நல்லராயின் அப்பண்புகளைத் தம்பால் அமைத்துக் கொள்வர், அல்லராயின் செருக்குற்றுத் தனக்கும் பிறர்க்கும் கேடு சூழ்வர். இந்நிலையில் அல்லரைப் புகழ்வார் செயல் "சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தது போலத்" தீங்குக்கு வித்தாகுமாதலின் அச்செயலை நிர்மூடத் துயர்தரும் செயல் என்றார்.

**பிரம விளக்கொளி :** தன்னை அண்டிய பொருளைப் புறத்தே மட்டும் விளக்கமுறச் செய்வது விளக்கொளி. பரம்பொருளோ, எல்லாப் பொருள்களின் உள்ளும் புறம்புமாய் நின்று உள்ளும் புறமும் விளங்கச் செய்தலின் பிரம விளக்கொளி என்றார்.

உலக விளக்குகள் சிற்றெல்லைக்குள் சிறுபொழுது மட்டும் சிறறொளி தந்து பிறபொருள்களின் (எண்ணெய், திரி...) சார்பால் விளக்கம் செய்வன. பெருமான் இவைஎல்லாவற்றுக்கும் மாறானவன் ஆதலின் இங்ஙனம் குறித்தார் எனினும் அமையும்.

**வீயாத பிரமம்** : பிரமம் என்கிற சொல், பிரமன், திருமால், சிவன், பரம்பொருள் என்கிற பலபொருள் தருவது. முற்றழிப்புக் காலத்தில் பிறரெல்லாம் பரம்பொருளுள் ஒடுங்க, அவன் மட்டும் என்றும் அழியாதவனாக நிற்றலின் வீயாத என்கிற அடைதந்தார். வீயாத – இனம் விலக்கிய அடைமொழி.

**முடிப்பு** : எல்லாவற்றையும் என்றும் தனிநின்று விளக்கும் பரஞ்சோதியே என் மூடத்துயரற்று; பேரின்பம் அருள்.

19.

| | | | | |
|---|---|---|---|---|
| விளங்கும் | கரிமுகம் | மின்னஎன் | உள்ள | விரைமலர்மேல் |
| களங்கம் | கெடவளர் | கற்பக | மேஅறு | கால்பிரசம் |
| முளங்கும் | பரிபுர | முண்டகம் | தந்தருள் | மொய்த்தபரி |
| மளம்தங்கு | தோகை | அடிவாழ் | பெருச்சாளி | வாகனனே. |

**கூட்டுமுறை** : மொய்த்த... வாகனனே; விளங்கும்... அறுகால் முழங்கும் பிரசமுண்டகப் பரிபுரம் தந்தருள் என்று முடிக்க.

**குறிப்புரை** : விரை = நறுமணம். அறுகால் = தேனீ. பிரசம் = தேன். முழங்கும் என்பது எதுகை நோக்கி முளங்கும் என்று திரிந்தது செய்யுள் விகாரம். பரிபுரம் = திருவடி – தானியாகுபெயர்.

**பொழிப்புரை** : நந்தனவனங்களின் காரணமாகச் செறிந்த மணம் தங்கும் மயின்மலை அடியில் எழுந்தருளியுள்ள பெருச்சாளி வாகனனே; கருணை விளங்கும் உன் யானைமுகம் ஒளிவீச என் உள்ளமாகிய மணமிக்க மலரிலுள்ள களங்கம் கெடுமாறு வளரும் கற்பகமே; ஆறுகால் வண்டுகள் தேனுண்ண முழங்கும் தாமரை போன்ற உள் சிலம்பணிந்த திருவடிகளைத் தந்தருள்வாயாக.

**விளக்கம்** :

**உள்ள... களங்கம்**; மணமிக்க மலர் போன்ற உள்ள மாயினும் அதில் "நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்கும்



உண்டு" என்றாற் போலவும், "மதிக்கண் மறுப் போலவும்" களங்கம் சிறிதிருக்க வாய்பபுண்டு. அக்களங்கமும் கெடுவதே மணக்கும் உண்மை வாழ்வு என்பது குறித்தார்.

**கற்பகமே** : தன்னடி இருந்து நினைப்பார் நினைப்பனவெல்லாம் தருவது கற்பகத்தரு. அதுபோல இப்பெருமான் வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய் என்பது குறித்தார்.

**மொய்த்த... தோகையடி** : காலை, பகல், மாலை, இரவு என்று எந்நேரமும் மலர்ந்து மணம் பரப்பும் பன்மலர் கொண்ட நந்தனவனங்கள் சூழ்ந்தது மயின் மலையாதலின் மொய்த்த பரிமளம் தங்குவதாயிற்று.

**பெருச்சாளிவாகனன்** : இந்திர சபையில் வாமதேவரை அவமதித்த கிரௌஞ்சன் என்னும் கந்தருவன், அவர் சாபத்தால் பெரிய எலியாயினன். இவ்வெலி, பராசர முனிவரின் ஆசிரமத்தைப் பாழ்படுத்தவே, பராசரர் விநாயகரை வேண்ட, இவர் அதனைத் தன் வாகனமாகக் கொண்டார்.

"கணபதி" – மகாவித்துவான்.ச.தபக் 64

**முடிப்பு** : என் உள்ளக் களங்கம் கெட வளர் கற்பகமே, பெருச்சாளி வாகனனே; விரை மலர்த்தாள் அருள்க.

20.

| | | | | |
|---|---|---|---|---|
| வாகன் | அதோமுகன் | வள்ளிபங் | காளன்என் | வாக்கில்நிற்கும் |
| யோகன்அ | மோகன் | அநேகன் | விதேகன்நன் | யூகன்அம்பாள் |
| பாகனும் | போற்றும் | பரிபூ | ரணனார் | பழகுகுன்றை |
| ஆகிநில் | தோகை | அடிவாழ் | பராபர | ஆனந்தனே. |

**கூட்டுமுறை** : ஆற்றொழுக்கு.

**குறிப்புரை** : வாகன் = வாகு + அன்– பன்னிரு திருத்தோள்களுடையவன். அதோமுகன் = கீழ்நோக்கிய திருமுகம் – ஞானிகட்குப் புலனாகும் திருமுகம் – கொண்டவன். பங்காளன் = கணவன். யோகன் = உயர்ந்தவன். அமோகன் = மோகமற்றவன். அநேகன் = எல்லாமாகவும் இருப்பவன். விதேகன் = தனக்கென்று ஒரு திருமேனியில்லாதவன்.

(வி – இன்மையுணர்த்தும் முன்னொட்டு). யூகன் = விவேகன். பரிபூரணன் = எங்கும் நிறைந்திருப்பவன். நில் = நிலைத்த.

**பொழிப்புரை :** பன்னிரு திருத்தோள்களும், ஞானிகட்குப் புலனாகும் அதோமுகமும் கொண்டவனும், வள்ளி நாச்சியார் கணவனும், என் வாக்கில் நிற்கும் உயர்ந்தவனும், மோகமற்றவனும், எல்லாமாக இருப்பவனும், தனக்கென்று ஒரு திருமேனி இல்லாதவனும், நல்ல விவேகனும் ஆகிய அருள்தரு சண்முகநாதப் பெருமானும், பராசத்தியை இடப்பாகம் கொண்ட பரசிவமும் போற்றுமாறு எழுந்தருளி, குன்றக்குடிக்கு உரியவனாகி, நிலையாகத் தோகையடியில் உள்ள எங்கும் நிறைந்திருப்பவனாகிய அருள்தரு தோகையடி விநாயகப் பெருமான் மேலானவற்றுக் கெல்லாம் மேலான பேரின்ப வடிவினன் ஆவான்.

**விளக்கம் :**

**அதோமுகன் :**

"ஆனனம் ஐந்தும் அதோமுகம் ஒன்றுமாம் ஆறுமுகன்"
என்பார் பின்னும் (பா. 21).

"ஐந்து முகத்தோடு அதோமுகமும் – தந்து
திருமுகங்கள் ஆறாகி" –என்பார் குமரகுருபர அடிகள்.

**ஐந்து முகங்களாவன :** பளிங்கு நிறத்ததாம் மேல் நோக்கிய ஈசானம், வெண்ணிறத்தாம் மேற்கு நோக்கிய சத்தியோசாதம், செந்நிறத்ததாம் வடக்கு நோக்கிய வாமதேவம், கருநிறத்ததாம் தெற்கு நோக்கிய அகோரம், பொன்னிறத்ததாம் கிழக்கு நோக்கிய தத்புருடம் என்பன.

**விதேகன் :** "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலான்" என்பது மணிவாசகம்.

**நன்யூகன் :**

தமரநீர்ப் புவனம் முழுது ஒருங்கு ஈன்றாள்
தடாதகா தேவிஎன்று ஒருபேர்
தரிக்கவந் ததுவும் தனிமுதல் ஒருநீ
சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர்
கொண்டதும் தண்டமிழ் அமுதம்



கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையார் அறிவார்"
– மதுரைக் கலம்பகம். 93.

என்பதால் அம்மையும், அப்பனும், ஆறுமுகனும் சங்கத்தலைமை பூண்டு தமிழாய்ந்த பரம்பரை என்பது புலனாகும். அதனால் யூகன் மட்டுமின்றி, யூக பரம்பரையினன் என்பதும் தெளிவாகும்.

**பாகனும் :** உம்மை உயர்வு சிறப்பும்மை, எச்சவும்மையாய் நின்றும் முருகனையும், பிறர் எல்லாரையும் உள்ளடக்கும்.

**முடிப்பு :** அருள்தரு சண்முகநாதப் பெருமானும், மங்கைபாகனும் ஒருசேரப் போற்ற மயின்மலை அடிவாரத்தில் எழுந்தருளியுள்ள இப்பெருமான் மேலானவற்றுக் கெல்லாம் மேலான ஆனந்தனும் ஆவான் – முத்திப் பேறும் ஆவான்.

## 21.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆனனம் | ஐந்தும் | அதோமுகம் | ஒன்றுமாம் | ஆறுமுகன் |
| தானனம் | ஆனவட்(கு) | ஏனலின் | மன்(று)உறும் | தாலிகட்ட |
| வானன | யானை | வடிவெடுத் | தானைஓர் | வல்லபையாம் |
| மானணை | தோகை | அடியானைப் | போற்றிட | வாமனமே. |

**கூட்டுமுறை :** மனமே, ஆனனம்... மன்று உறும் ஓர் தாலிகட்ட... வா. என்று முடிக்க.

**குறிப்புரை :** ஆனனம் = திருமுகம். தான் அனம் ஆனவள் = அன்னமாகிய வள்ளி நாச்சியார். மன்று உறும் ஓர் தாலிகட்ட = பலர் அறியுமாறு ஒப்பற்ற திருப்பூட்ட, வான்அன = மேலான.

**பொழிப்புரை :** மனமே, திருமுகங்கள் ஐந்துடன், அதோமுகம் ஒன்றும் ஆக ஆறுமுகங் கொண்ட முருகன், அன்னப் பறவையான வள்ளி நாச்சியாருக்குப் பலரறியுமாறு திருப்பூட்ட, தான் யானை வடிவெடுத்தவனை, வல்லபையாகிய மானை மார்போடணைத்த தோகையடி விநாயகப் பெருமானைப் போற்ற வருவாயாக.

விளக்கம் :

**ஏனலின் மன்று உறும் தாலிகட்ட :**

வள்ளியம்மை யாரைக் களவில் மணந்த பெருமான், கற்பின் மணமுடிக்க ஏனலின் மன்று அமைந்தது.

உலகத்தார் தாலிகள் ஒருநாள் பிரிவுபடும் நிலையின. பரசிவமாம் இவர் அவருக்குக் கட்டியது எக்காலத்தும் நிலையானதாயினமையின் ஓர் தாலி என்றார்.

முடிப்பு : மனமே, அருள்தரு சண்முகநாதப் பெருமான் வள்ளி நாச்சியாருக்குத் தாலிகட்ட, யானை முகத்துடன் வந்தவனைப் போற்ற வருவாயாக.

## 22.

| | | | | |
|---|---|---|---|---|
| வாமனம் | தன்னைஅன் | பாய்ச்சொன்ன | மாதிரு | வள்ளுவர் போன்(று) |
| ஆமனை | யாளுடன் | இல்வாழும் | முத்தர் | இசைஅருளால் |
| காமனை | ஏமனைக் | கன்மத்தை | நீக்கக் | கருத்திடஏன் |
| தாமதம் | தோகை | அடிவாழ் | பவர்பதம் | சார்ந்தவர்க்கே. |

கூட்டுமுறை : ஆமனை... அருளால், தோகையடிவாழ்பவரது, வாமனம் தன்னை... போன்ற பதம், அன்பாய்ச் சார்ந்தவர்க்குக் காமனை.. ஏன் தாமதம்? தாமதமின்றி அருள்க என்று வருவித்து முடிக்க.

குறிப்புரை : ஆமனையாள் = அந்தப் பராசத்தி. "நீடவருதல் செய்யுளில் உரித்தே" – தொல். எழுத்து. 289. என்ற இலக்கணப்படி அகரச் சுட்டு நீண்டது. முத்தர் = பரசிவம். இசை = பொருத்தம். கருத்திட = கருத்துக் கொள்ள.

பொழிப்புரை : பராசத்தியைப் பிரியாத பரசிவத்தின் திருவருளால், மயின் மலைத் தோகையடிவாழ் பெருமானாகிய உனது, வாமனாவதாரம் பற்றிக் கூறிய திருக்குறளின் இரண்டு அடிகளை ஒத்த திருவடிகளை அன்பாய்ச் சார்ந்த அடியார்க்குக் காம ஆசையையும், எமனையும், இருவினைகளையும் நீக்க நீ தாமதம் செய்வது ஏன்? அருள்புரிய விரைந்து திருவுளம் பற்றியருள்க.



விளக்கம் :

**வாமனம்... திருவள்ளுவர் :**

திருக்குறளின் பத்துப் பெயர்களுள் திருவள்ளுவர் என்பதும் ஒன்று. அதன் சிறப்பு நோக்கி மா என்ற அடை தந்தார்.
வாமனம் கூறும் குறள்.

"மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு".

பெருமான் திருவடிக்கு உவமையாகத் திருக்குறளைக் கூறியதன் மூலம் இரண்டடித் திருக்குறள் வழி நிற்பாரும் இம்மை மறுமை இன்பம் எய்துவர் என்பதைக் குறிப்பாலுணர்த்தினார்.

பிறவற்றைக் குறிக்காது. ஆசிரியர் வாமனம் பற்றிக் குறித்தது, வாமனன் காலதாமதமின்றித் தன் ஈரடியால் மூவுலகளந்து, திருவடி சூட்டி இருள் தீர்த்ததுபோல் நீயும் காலதாமதமின்றி உன் ஈரடி எடுத்துச் சூட்டி என் இருள் தீர்க்க வேண்டும் என்ற குறிப்புடையது.
வாமனன் செயலை,

திரண்டமரர் தொழுதேத்தும் திருமால் நின் செங்கமல
இரண்டடியால் மூவுலகும் இருள் தீர நடந்தனையே"
– சிலம்பு. ஆய்ச்சியர் குரவை.

என்பதால் அறியலாம்.

**கருத்திட ஏன் தாமதம்** : நீ காலம் தாழ்த்துவதால் "என்னை உன் அடியான் என்று ஏசா நிற்பர்". "நீ பேசாதிருந்தால் ஏசாரோ" ஏச்சும் பேச்சும் எனக்கு மட்டுமின்றி உனக்கும் தான். எனவே காலதாமதமின்றி அருள்புரிக என்றார்.

உன் தந்தை முத்தர், காமனை எரித்தவர், ஏமனை உதைத்தவர், மலமே இல்லாதவர். தந்தையின் பண்புகள் உனக்கும் வேண்டும் என்பார், தந்தையை – பரம்பொருளை இங்குக் குறித்தார். பரம்பரையாகக் கைவந்த கலையைத் தாமதமின்றிச் செயற் படுத்து என்றார்.

**முடிப்பு :** காமனை, ஏமனைக் கன்மத்தை நீக்க மடி வேண்டா; நீக்குவதும் உனக்கு எளிது. எனவே அருள்புரிக.

**23.**

| | | | | |
|---|---|---|---|---|
| சார்ந்தவர்க்(கு) | இன்பமும் | சாயுச்ய | முத்தியும் | தந்(து)அறிவாய் |
| ஆர்ந்தநின் | பாதம் | அடியேன் | அடையும் | அருள்கிடைத்தால் |
| கூர்ந்திடும் | ஈண்(டு)அதில் | மீண்டும் | பிறப்பனோ | குன்றைவளம் |
| சேர்ந்திடும் | தோகை | அடிவாழ் | சிவோகமா | சிந்துரமே. |

**கூட்டுமுறை :** குன்றை வளம்.. சிந்துரமே, அறிவாய் ஆர்ந்த... கிடைத்தால் அதில் சார்ந்தவர்க்கு ஈண்டு வளம்தந்து இன்பமும் கூர்ந்திடும். சாயுச்ய முத்தியும் சேர்ந்திடும்; மீண்டும் பிறப்பனோ அருள் என்று முடிக்க.

**குறிப்புரை :** சிவோகம் = பரசிவமாக விளங்கும். சிந்துரம் = யானை – விநாயகர். இன்பம் கூர்ந்திடும் = இம்மை இன்பம் பெருகும். சாயுச்ய முத்தி = சிவசாயுச்யமாகிய பரமுத்தி.

**பொழிப்புரை :** குன்றக்குடி மயின்மலைத் தோகையடிவாரத்தில் அருள் வழங்கும் தோகையடி விநாயகப் பெருமானே; ஞானமயமாய் விளங்கும் நின் திருவருள் எனக்கு வாய்க்குமானால்; அது இப்பிறப்பிலே வளம் தந்து இன்பமும் மிகுவிக்கும்; மறுமையில் சிவசாயுச்யமாகிய பரமுத்தியும் தரும். அதனால் மீண்டும் பிறவாநிலை எய்துவேன் அருள்புரிக.

**விளக்கம் :**

**சாயுச்ய முத்தி :** சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற படிமுறைகள் நான்கும் ஒன்றின் ஒன்றாக முதிர்ந்து வீடுதரும். இதனை,

> "விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
> அரும்புமலர் காய் கனிபோல் அன்றோ பராபரமே"
>
> – தாயுமானவர்.

என்பர்.

சரியை கிரியை யோகம் மூன்றினாலும் முறையே சாலோக, சாமீப, சாரூபம் என்ற பதமுத்திகளும் ஞானத்தால் சாயுச்சியமாகிய பரமுத்தியும் வாய்க்கும் என்பது நம் சமயத் துணிபு.



**வளம் தந்து இன்பமும் கூர்ந்திடும் :** வளம் பெறாது துன்புறுதலும், வளம்பல பெற்றும் அது துய்க்கவியலாது துன்புறுதலும் ஆகிய இவையின்றி வளம் தந்தும், அதனைத் துய்க்கும் நெறியறிந்து துய்த்தலால் இன்பம் பெருகச் செய்தும் அருள்வான் என்றார்.

> இம்மை யேதரும் சோறும் கூறையும்
> ஏத்த லாம் இடர் கெடலுமாம்
> அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்(கு)
> யாதும் ஐயுற வில்லையே என்பதாலும்,
>
> – சுந்தரர்

| | | | | |
|---|---|---|---|---|
| முடியாப் | பிறவிக் | கடலில் | புகார்முழு | தும்கெடுக்கும் |
| மிடியால் | படியில் | விதனப் | படார்வெற்றி | வேல்பெருமாள் |
| அடியார்க்கு | நல்ல | பெருமாள் | அவுணர் | குலம்அடங்கப் |
| பொடியாக் | கியபெரு | மாள்திரு | நாமம் | புகல்பவரே. |

கந்தரலங்காரம். 33

என்பதாலும், பெருமான் இருமை வளமும் தந்து இன்பம் கூரச் செய்வான் என்பதை உணரலாம்.

**சார்ந்தவர்க்கு இன்பம் :** பெருமான் பொதுவன். தன்னைச் சார்ந்தவர்க்கு இன்பம் தருவன் என்பது அவனது பொதுத்தன்மைக்கு ஊறு ஆகாதோ எனின் ஆகாது. வாடை தீர்க்கும் நெருப்பினைப் பயன் படுத்திக் கொள்ளாமை நெருப்பின் குற்றமன்று. உணவிருந்தும் பசியிருந்தும் எடுத்து உண்டு பசியாறாமை உணவின் குற்றமன்று. அது போலச் சாராதான் இன்பம் பெறாமை, பெருமான் குற்றமன்று.

> நலமிலன் நண்ணார்க்கு நண்ணினார்க்கு நல்லன்
> சலமிலன் பேர்சங் கரன் – திருவருட்பயன். 9.

என்பதால் இதனை அறியலாம்.

**பிறப்பனோ :** ஓகாரம் எதிர்மறைப் பொருளில் வந்தது. பிறவேன் என்பது கருத்து.

**கூர்ந்திடும்** : ஒன்றிலிருந்து ஒன்றாக மேனிலையில் வளர்தலே கூர்தல். சிற்சில சமயம் இன்பமே துன்பம் தருதலும் உண்டு. ஆனால் பெருமான் திருவருளின்பம் மேன்மேலும் பெருகி இன்பமே தரும் என்ற குறிப்பினது.

**முடிப்பு** : பரசிவமான சிந்துரமே, உன் அருள் கிடைப்பின் வளமும் இன்பமும் பெற்றுச் சிவ சாயுச்சியமும் சேர்வேன், பிறவேன், அருள்க.

## 24.

| | | | | |
|---|---|---|---|---|
| சிந்தித்த | சேயர் | நினைக்கும் | சுகஅருட் | செல்வமதும் |
| தந்(து)இத் | தரையிடைத் | தன்னிகர் | அற்றுவாழ் | தன்மையும் சொல் |
| தந்நித் | தலையுடைத் | தற்பர | விற்பன | சற்குருவாம் |
| சொந்தத்த | தோகை | அடிவாழ் | அதோமுக | சுந்தரனே. |

**கூட்டுமுறை** : ஆற்றொழுக்கு.

**குறிப்புரை** : சேயர் = செம்மனத்தர். சுக அருட் செல்வம் = முத்தி. தெரிவு = பெறும் வகையில் கட்டளையிட்டருளும். தற்பரன் = தனக்குப் பிறர் தலைவனில்லாத தானே தனக்குத் தலைவர். விற்பன = ஞானவல்லபனே. சொந்தத்த = சொந்த + அத்த = உயிர்க் குலத்துக்குச் சொந்தமான தலைவனே.

**பொழிப்புரை** : உன் திருவடியே சிந்திக்கும் செம்மையுளங் கொண்டார் அடைய விரும்பும் சிவசாயுச்யமும், இவ்வுலகில் தன்னொப்பாரின்றி வாழும் தன்மையும் பெறுமாறு கட்டளையிட்டருளும் யானைத் தலையுடைய தனக்குத் தானே தலைவனாய் உள்ளவனே, ஞானவல்லபனே, சற்குருவாகி, உயிர்க் குலத்துக் கெல்லாம் சொந்தமான தலைவனே, தோகையடியில் எழுந்தருளியுள்ள அதோமுக அழகனே அருளுக.

**விளக்கம்** :

**சிந்தித்த சேயர்** : வாழ்வில் திருகும் உளமின்றி உருகும் உள்ளத்தவர். இவர் இருதிறப் படுவர். இவர் பெருமானைச் சிந்தித்ததால் சேயராயினாரும், சேயராயினமையால் பெருமானைச் சிந்தித்தாரும் ஆவர். இவ்விருதிறத்தாரும் அடங்க இங்ஙனம் கூறினார்.



**சுக அருட்செல்வமும்.... தன்மையும்** : செம்மனத்து நல்லடியார் விரும்புவது முத்திப்பேறேயாதலின் அதனை முற்கூறினார். அவர் இம்மையிலும் நலம் பெறுவராதலின் இம்மை நலம் பிற் கூறினார்.

**தன்னிகரற்று வாழ்தன்மை** : வளம் பல பெற்றாரும் தாம் பெறாத பிறி தொன்று குறித்து ஏங்குதல் உலகியல். எனவே, தன்னிகரற்ற தன்மை என்பது உளப்பாங்கு பற்றியதாகும். இத்தகு நல்லடியாரை,

> "பெருமையால் தம்மை ஒப்பார், பேணலால் எம்மைப் பெற்றார், ஒருமையால் உலகை வெல்வார், ஊனம் மேல் ஒன்றும் இல்லார் அருமையாம் நெறியில் நின்றார், அன்பினால் இன்பம் ஆர்வார் இருமையும் கடந்து நின்றார்" – பெரியபுராணம், 341.

என்று கூறுவது எண்ணத்தக்கது.

**சொந்த அத்தன்** : உயிர்க்குச் சொந்தம் பற்றிக் கூற வந்த பட்டினத்து அடிகளார்

> "அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி அம்பொழுக
> மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மிஇரு
> கைத்தலை மேல்வைத் தழுமைந் தரும்சுடு காடுமட்டே
> பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவங்களே".

என்பார். சுத்த நிலையில் இப்புண்ணிய பாவங்கள் இல்லை யாதலின் பிறவிக்கு வித்தாய் விளங்கும் புண்ணிய பாவநிலையே பட்டினத்தார் குறித்தது. எனவே, கேவலம், சகலம், சுத்தம் என்கிற மூன்று நிலைகளிலும் உயிர்த்துணை பெருமான் ஒருவனே. அது பற்றியே "தனித்துணைநீ" என்றார் மணிவாசகர். எனவே சொந்த அத்தன் அவன் ஒருவனே என்க.

**முடிப்பு** : உன்னைச் சிந்திக்கும் செம்மனத்தார் இம்மை மறுமை இன்பம் பெற்றுச் சிறக்கக் கட்டளை இடும் பெருமானே, நானும் அவை பெறக் கட்டளை இட்டருள்க.

## 25.

| | | | | |
|---|---|---|---|---|
| கந்தரச் | செவ்வேல் | துரைமகன் | வெற்பன் | சுரர்பிழைக்கத் |
| தந்திரச் | சூரரைத் | தாக்கிய | சண்முகன் | தன்துணைவா |
| இந்திரர் | முப்பத்து | முக்கோடி | தேவரும் | ஏற்றுகுன்றை |
| மந்தரத் | தோகை | அடிவாழ் | மகான்களின் | மாணிக்கமே. |

கூட்டுமுறை : ஆற்றொழுக்கு

குறிப்புரை : துரை = சிவபரம்பொருள். சுரர் = தேவர். தந்திரம் = மாயை. கோடி = தொகுதி – வகை. மந்தரம் = மலை.

பொழிப்புரை : அழகியதும், சூர்மார்பும் குன்றும் துளைத்ததால் சிவந்ததும் ஆகிய வேலேந்தியும், சிவபெருமானுக்கு மகனும், குறிஞ்சிக்கிழவனும், தேவர் பிழைக்க மாயை வல்ல அசுரர்களைத் தாக்கி வென்றவனும் ஆகிய அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்கு ஒப்பற்ற துணைவனே! இந்திரரும், முப்பத்து மூவகைத் தேவர்களும் போற்றும் குன்றக்குடிக் குன்றின் தோகையடியில் எழுந்தருளி அருள் வழங்குகின்றவன் ஆகிய மகான்களின் மாணிக்கமே அருளுக.

விளக்கம் :

**துரை** : இச்சொல் ஆங்கிலேயர் வருகையால் தமிழில் வந்த சொல். இதனை,

"மதுரைத்துரை மகள்" – மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (29)

"மதுரைத்துரைப் பெண்" – மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (72)

என்று குமரகுருபர அடிகள் எடுத்தாள்வது எண்ணத்தக்கது.

**சண்முகன்தன் துணைவா** : வள்ளியை மணம் புரியவும், அசுரனை வெல்ல மாயையின் வல்லபம் அடக்கவும் உதவியவரிவராதலின் துணைவர் எனப் பெற்றார்.

**முப்பத்து முக்கோடி தேவர்** : கோடி என்றது இங்கு எண்ணிக்கையைக் குறிக்காது வகையைக் குறிக்கும். தேவர்கள் முப்பத்து மூன்று வகையினர் என்பர்.

"முப்பத்து மூ வர்க்கத்து அமரரும் அடிபேண" –

என்பது அருணகிரியார் வாக்கு.

முடிப்பு : அருள்தரு சண்முகநாதப் பெருமான் துணைவா. இந்திரன் முதலிய முப்பத்து மூவகைத் தேவரும் போற்றும் குன்றக்குடித் தோகையடியானே மகான்களின் மாணிக்கமே அருள்க.



## 26.

மாணிக்க வல்லிஎன் ஆத்தாளை ஓர்இடம் வைத்தமதி
வேணிக் கபாலக்கை வெண்ணீ(று) அணிவார் வியந்தகனிப்
பாணிக் கணேசா பகர்வாய்என் உள்ளம் பரிந்துவைத்த
காணிக்கை தோகை அடியாய்உன் தண்டைக் கழலிணைக்கே.

கூட்டுமுறை : தோகையடியாய், மாணிக்க, கணேசா, என் உள்ளம் உன் தண்டைக் கழலிணைக்கே காணிக்கை, பகர்வாய்.

குறிப்புரை : ஓர்இடம் = ஒப்பற்ற இடப்பாகம். பாணி = திருக்கை. நயந்த = நன்கு மதித்த. பகர்வாய் = எனக்கு உபதேசம் அருள்க.

பொழிப்புரை : அருள்தரு தோகையடிப் பெருமானே, மாணிக்கக் கொடியாகிய என் தாயை ஒப்பற்ற இடப்பாகம் வைத்தவரும், பிறைசூடிய திருச்சடையும், கபாலம் ஏந்திய திருக்கையும், வெண்ணீறு பூசிய திருமேனியும் கொண்ட சிவபெருமான் நன்குமதித்த கனியைத் தன் கையில் பெற்ற கணேசனே, என் உள்ளம், தண்டையும் கழலும் அணிந்த உன் திருவடிகட்கு நான் அன்புடன் வைத்த காணிக்கையாகும், எனக்கு உபதேசம் அருளுக.

விளக்கம் :

**மதிவேணி** : தன் பிழையுணர்ந்தார். தனது காலில் வீழில் தனது தலையில் தாங்கும் பெருமானின் அறக் கருணை குறிப்பது.

**கபாலக்கை** : செருக்குடையார் எத்தகையராயினும் அச் செருக்கழிக்கும் பெருமானின் மறக்கருணை குறிப்பது.

**வெண்ணீறணிவார்** : அறக்கருணையும் மறக்கருணையுமாகிய கருணையே வடிவான இவர் பேராற்றலுடையவர்; வலியிலரல்லர் – என்பது குறிக்க முற்றழிப்புக் காலத்தில் – கடையூழியில் – நட்டம் புரிந்தாடும் நிலையில் வெந்த வெண்ணீறணியும் பேராற்றல் குறித்தார்.

**வியந்த கனி** : நாரதர் தந்த கனியின் சிறப்பு நோக்கி அதனைப் பகிர்ந்தளிக்கச் சிவபெருமானுக்கு மனமில்லா நிலை குறித்தது. இது பற்றிய இப் புராணச் செய்தியை

சுடர்ப்பிழம்பு தழைத்த அழல்தனி நெடுவேல்
சேய்மூ வுலகம் வலம்வர வேஅக்
கொன்றைப் படலம் துன்றுசடைக் கிடந்த
ஓங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளல் திஞ்சுவை அருந்திய வள்ளல்

– மூத்தபிள்ளையார் திரு மும்மணிக்கோவை... 13.

என்பதாலும் அறியலாம்.

**என் உள்ளம்... காணிக்கை :** என் உள்ளத்தை நான் உனக்குக் காணிக்கையாக்கி விட்டபடியால் எனக்கும் அதற்கும் இனி எவ்விதத் தொடர்புமில்லை; உனக்கே முழு உரிமை அதன் மீது. அதை எடுத்தாள வேண்டுவது உன் பொறுப்பு என்றார்.

இருந்து என்னை ஆண்டு கொள்
விற்றுக் கொள் ஒற்றிவை – திருவாசகம். 122.
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே – திருவாசகம். 500.

என்கிற போக்குக் குறித்தது.

**பகர்வாய் :** நீ என் குருமூர்த்தி; காணிக்கை செலுத்திவிட்டேன்; குருவாய் உவந்து உபதேசம் அருள்வாய் என்பது குறித்தது.

**முடிப்பு :** சிவன் வியந்த கனிபெற்றவனே, என் உள்ளம் உன் காணிக்கை; குருவாய் வருவாய் உபதேசித்தருள்வாய்.

## 27.

இணைக்குங் குமவரைச் சேக்கைச் சிவைவடி ஏறிநின்று
பணைக்கும் கைகொட்டி விளையாடும் அன்புடைப் பாலகனே
கணைக்கும் கதிகொள் விழிச்சித்தி புத்திகல் யாணமிட்டு
மணக்கின்ற தோகை அடிவாழும் குஞ்சர மாமுகனே.

**கூட்டுமுறை :** குங்குமம் இணைவரைச் சேக்கைச் சிவைஎன்று கூட்டித் தொடர்ந்து அருள்க என்று முடிக்க.

**குறிப்புரை :** குங்குமம் இணைவரைச் சேர்க்கை = குங்குமக் குழம்பு பூசிய இரு குன்றுகளாக விளங்கும் திருமார்பு. சிவை = பராசத்தி. பணை = திரள். கணை = நிறைவு. கதி = ஆற்றல். மணம் = மகிழ்ச்சி.



**பொழிப்புரை :** குங்குமச் சாந்து பூசிய இரு குன்றுகளாகிய திருமார்புகள் கொண்ட பராசத்தியின் மடியில் ஏறி நின்று, திரண்ட தன் திருக்கை கொட்டி விளையாடும் அவள் அன்புக்குரிய மகனே, நிறைந்த ஆற்றல் கொண்ட விழிகளைப் பெற்ற சித்தி, புத்தி இருவரையும் மணந்து மகிழ்கின்ற தோகையடி வாழும் யானை முகப் பெருமானே அருள்புரிக.

**விளக்கம் :** குழந்தைப் பருவ விளையாட்டுகளை – அன்னை மடியில் ஆடுதல் – இலக்கியங்கள் முருகன், மூத்த பிள்ளையார் இருவர் மீதும் வைத்துக் கூறும். முருகப் பெருமான் திருவிளையாட்டினை,

மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்துகில்
மடித்தலம் நனைப்ப அம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்துஏறி எம்பிரான்
மார்பினில் குரவை ஆடி
முழவுமுதிர் துடியினில் சிறுபறை முழக்கி அனல்
மோலிநீர் பெய்துஅவித்து
முளைமதியை நெளிஅரவின் வாய்மடுத்து இளமானின்
முது பசிக்கு அறுகு அருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தாள்எழ
மிகப்புழுதி ஆட்ட யர்ந்து
விரிசடைக் காட்டினின்று இருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையம் ஆடிக்
குழவுமுதிர் செவ்விப் பெருங்களி வரச்சிறு
குறும்பு செய்தவன் வருகவே.....

– முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ். வருகை. 2.

என்கிற ஸ்ரீகுமரகுருபர அடிகள் திருவாக்கினாலும் அறியலாம்.

**சித்திபுத்தி கல்யாணமிட்டு :** பிரமன், விநாயகரை வழிபாடு செய்யாது படைப்புத் தொழில் தொடங்க, படைத்தன பேயும் பிசாசுமாகித் துன்பம் தந்தன. அஞ்சிய அவன், கணபதியின் ஏகாட்சர மந்திரம் செபிக்க, அவர் வெளிப்பட்டுச் சித்தி புத்திகளை உபாசிக்குமாறு உபதேசித்தார். அவ்வண்ணம் அவர்களை உபாசித்து அவர்களை மகளாகப் பெறும்பேறு பெற்றான்; படைப்புத் தொழிலும் கைவந்த தாயிற்று. பின்னர் மக்கள் இருவரையும் மணக்குமாறு விநாயகரை வேண்ட அதற்கு விநாயகர் இசைந்து அவர்களை மணந்தார்.

"கணபதி". மகாவித்வான் ச.த. பக். 67.

விநாயகப் பெருமானின் பேராற்றல் பற்றிய உருவகங்கள் அல்லது குறியீடுகளே சித்திபுத்திகள் என்பர்.

**முடிப்பு :** பராசத்தி மடியில் விளையாடும் பாலகனே, சித்திபுத்தியை மணந்தவனே, யானைமுகனே எனக்கு அருள்க.

## 28.

| | | | | |
|---|---|---|---|---|
| முகம்பார்த்(து) | அருளநீ | முன்வரா(து) | இன்னும் | முடு(கு)என்னோ |
| அகம்பார்த்(து) | அலையவிட்(டு) | ஆட்டல் | நன்றோஎனை | ஆதரிப்பாய் |
| மகம்பார்த்(து) | உளற்றுவர் | தேவாதி | தேவர் | வணங்கியுள்ள |
| சுகம்பார்த்த | தோகை | அடிவாழ் | சிவானந்த | சூரியனே. |

**கூட்டுமுறை :** தேவாதி தேவர் மகம் பார்த்து வணங்கி உளற்றுவர்; உள்ள சுகம்... சூரியனே; முகம்... ஆதரிப்பாய்.

**குறிப்புரை :** முடுகு = விரைந்து விலகிச் செல்லுதல். அகம் = என் மனத்துயர். ஆட்டல் = வருத்துதல். மகம் பார்த்து = வேள்வி முதல்வனாக வைத்து. உளற்றுவர் = இயற்றுவர். சிவானந்த சூரியன் = முத்திப் பேறாம் ஒளிவடிவினன்.

**பொழிப்புரை :** தேவர்களும், தேவர் தலைவர்களும் உன்னை வேள்வி முதல்வனாகக் கொண்டு வேள்வி இயற்றுவர். உன்னை வணங்கிச் சுகம் பார்த்தற்குரிய மயின்மலை அடிவாரத்தில் எழுந்தருளி அருள்புரியும் முத்திப் பேறாம் ஒளிவடிவினனே; என் முகம் பார்த்து அருள நீ இன்னும் வராததேன்? என்னை விட்டு விரைந்து விலகிச் செல்வதேன்? என் மனத்துயர் கண்டும் நீ வராமல் என்னை அலையவிட்டு வருத்துவதேன்? விரைந்து வருக; அருள்புரிக.

**விளக்கம் :**

**முகம்பார்த்து அருளல் :** உலகியலில் பிறர்க்கு உதவும் நிலையிலும் கூட நேருக்குநேர் – முகம் பார்த்து – உதவுதலே நன்று. முகம் – பார்த்து அருளாக்கால்

"நின்ற என்நயந் தருளி ஈதுகொண்டு
ஈங்ஙனம் செல்க தான்என என்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்?



காணாது ஈத்தஇப் பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன் பேணித்
தினையனைத் தாயினும் இனிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே" – புறம். 208.

என்றவாறு பிறிது பிறிதாகலாம். உலகியலுக்கு மட்டுமின்றி, அருளியலுக்கும் இது ஒத்தது என்பதை இந்நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

**இன்னும் :** கருணையே பொழியும் உன் தகுதி நோக்கியிருப்பினும், அல்லலே படும் என் அவலம் நோக்கியிருப்பினும் நீ என் முன்வந்து அருள் தந்திருப்பாய். வருவாய் என்ற நம்பிக்கை உள்ளது என்ற நிலையை புலப்படுத்துவது.

**நன்றோ :** ஓகாரம் உன் தகுதிக்கு நன்றன்று என்ற எதிர்மறைப் பொருள் தருவது ஆகும்.

**சிவானந்த சூரியன் :** சூரியன் தன்னிருப்பையும், பொருளின் இருப்பையும் உணர்த்துவான். உன்னிருப்பை உணர்த்தியநீ என்னை எனக்கு உணர்த்து என்ற கருத்தில் சூரியன் என்றும், உலகஞாயிறு ஆக்கமும் அழிவும் தரும்; நீயோ ஆக்கமே – வீடுபேறே தருகின்றவன் என்ற கருத்தில் சிவானந்த என்கிற அடை தந்தும் கூறினார்.

**முடிப்பு :** சிவானந்த சூரியனே; என் முகம் பார்த்து அருள்க; முடுகற்க; என்னை ஆதரிப்பாயாக.

## 29.

| | | | | |
|---|---|---|---|---|
| சூரிய | னேபல | கோடிவந் | தன்ன | துதிக்கவரும் |
| ஆரிய | னேஅறி | வாய்ச்சர்வ | சீவரும் | அன்புறுநற் |
| காரிய | னேஎனைக் | காவா | கயாசுரன் | கண்(டு)ஆண்டருள் |
| வீரிய | தோகை | அடிவாழ் | விராட்டு | வியாபகனே. |

**கூட்டுமுறை :** கயாசுரன்..... வியாபகனே; துதிக்கப் பலகோடி சூரியர் வந்தன்ன ஆரியனே; அறிவாய்.... கா, வா.

**குறிப்புரை :** கயாசுரன் = யானைத் தலையரக்கன். கண்டு = ஆட்கொள்ள வழிகண்டு. வீரியன் = வீரன். விராட்டு = பரம்பொருள்.

வியாபகன் = எங்கும் அறியப்படும் தன்மையுள்ளவன். நற்காரியன் = நற்பயனானவன்.

பொழிப்புரை : கயமுகாசுரனை ஆட்கொள்ளும் வழிகண்டு அவனை ஆட்கொண்ட வீரனே; மயின் மலை அடிவாரத்தில் எழுந்தருளியுள்ள பரம்பொருளே; எங்கும் அறியப் படும் தன்மையுள்ளவனே; அனைவரும் வணங்கி ஈடேறப் பலகோடி சூரியர்கள் வந்தாற்போன்று எழுந்தருளும் தலைவனே; ஞான மயமாய் விளங்கி உயிர்க்குலம் அன்புமிகுவதற்குக் காரணமான நற்பயனானவனே; என்னைக் காக்க வருவாயாக.

விளக்கம் :

**நற்காரியன்** : கருணையே வடிவான பெருமான் அறக் கருணை புரியினும், மறக்கருணை புரியினும் விளைவது நற்பயனேயாதலின் அது குறித்துக் கூறினார்.

**கயாசுரன்.... வீரிய** : கயமுகன், மாகத முனிவருக்கும் அசுரர்குல மங்கை விபுதி என்பவளுக்கும் பிறந்த அசுரமகன். சுக்கிராச்சாரியார் இவனுக்குக் குரு. சிவபெருமானை நோக்கித் தவம் செய்து முடிவில் ஆயுதத்தால் மாளாத வரம்பெற்றான். இவனது செருக்கினால் அலைப்புண்ட தேவர்கள் வேண்ட, விநாயகர் இவனுடன் போருக்கு எழுந்தார். இவனது வரபலமறிந்து தன் கொம்பை ஒடித்து அவன்மீது எறிய அதற்கு ஆற்றாத அசுரன் பெருச்சாளியாக ஓட அதனைத்தன் வாகனமாகக் கொண்டார் என்பது கந்தபுராணச் செய்தி. அழிப்பது வீரமன்று; ஆக்கமுடையதாக ஆக்கிக் கொள்வதே வீரம் என்பதால் ஆண்டருள் வீரிய என்றார்.

முடிப்பு : கயமுகனை ஆண்ட வீரனே; பரம் பொருளே; வியாபகனே; தலைவனே; ஞான வடிவானவனே வா; கா.

**30**

| | | | | |
|---|---|---|---|---|
| வியாதியும் | தீதும் | மெலிவும் | தொடரா | விபுதிதந்து |
| கியாதியும் | இன்பமும் | செல்வமும் | தந்(து)உம் | கிருபைகொண்டு |
| பயாதியும் | இல்லாப் | பதவாரி | சம்தொழப் | பார்த்தருள்வாய் |
| தயாதியும் | தோகை | அடிகாண | வாழும் | தபோதனனே. |

கூட்டுமுறை : தயாதியும்... தபோதனனே; கிருபை கொண்டு விபுதி தந்து, வியாதியும்... தொடரா, கியாதியும்... தந்து பயாதியும் இல்லாப் பதவாரிசம் தொழப் பார்த்தருள்வாய் என்று கூட்டுக.



குறிப்புரை : தயாதி = தாய் + ஆதி (தாயாதி என்பது எதுகை நோக்கித் திரிந்த செய்யுள் விகாரம்.) பராசத்தி முதலியவரும். தபோதனன் = தவத்தையே செல்வமாகக் கொண்டவன். பயாதி = பயம் + ஆதி = பிறவிபற்றிய அச்சம் முதலியன. பதவாரிசம் = திருவடித் தாமரை.

பொழிப்புரை : உன் தாயாகிய பராசத்தி முதலியவர்களும், மயின்மலைத் தோகையடியில் எழுந்தருளியுள்ள உன்னைக் காணவருமாறு வாழும் தவத்தையே செல்வமாகக் கொண்டவனே; என்மீது கருணை காட்டித் திருநீறளித்து, நோயும் திங்கும் மெலிவும் என்னைத் தொடராது செய்து, புகழும் இன்பமும் செல்வமும் தந்து பிறவியச்சம் முதலியவற்றுக்குச் சிறிதும் இடமில்லாத உன் திருவடித் தாமரைகளைத் தொழக் கடைக்கண் சாத்தியருள்க.

விளக்கம் :

**தயாதியும்** : உம்மை உயர்வு சிறப்புக் குறித்தது. பிறர் அனைவரையும் உள்ளடக்கியது.

**தபோதனன்** : அன்னை பராசத்தியே இவரைப் பார்க்க வந்த காரணம் இவர் தவத்தையே செல்வமாகக் கொண்டவர் என்பதாகும்.

ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும்
எண்ணில் தவத்தால் வரும் – என்பது பொய்யாமொழி.

**வியாதியும் ... தொடரா** :

வியாதி, தீது, மெலிவு வந்து போவது இயல்பு. தொடர்தல் கூடாது என்பார் தொடரா என்றார்.

**கியாதியும்... தந்து** :

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே – புறம்

என்பதற்கேற்ப இன்பமும் செல்வமும் நிலையாதனவாதலானும், நிலைத்தது புகழே யாதலானும் கியாதியை – புகழை முன்வைத்தார். செல்வமிருந்தும் இன்புறா நிலையும், செல்வமில்லாவிடினும் இன்புறுநிலையும் உலகியலில் கண்கூடாகக் காண்பவாதலின் புகழையடுத்து இன்பத்தையும் அதனையடுத்துச் செல்வத்தையும் வைத்தார்.

**விபூதிதந்து** : கற்பம், அனுகற்பம், உபகற்பம் என்று விபூதி மூவகைப் படும் என்பர். விபூதி வழங்குதல் கருணையின் குறியீடு. இது அனைத்துத் துக்கங்களையும் தீர்த்தல், அனைத்து நற்பேறுகளையும் வழங்குதல் என்ற இரண்டினையும் குறிக்கும்.

துக்கம் தீர்த்தல், பேறுகள் வழங்குதல் இரண்டும் குறிப்பது விபூதி தருதல் ஆதலின், அம்முறைப்படி வியாதியும்... தொடரா, கியாதியும்... தந்து என்கிற இரு தொடர்களுக்கும் இடையில் விபூதிதந்து என்ற தொடர் அமைந்துள்ளது எண்ணுதற்குரியது.

**முடிப்பு** : பராசத்தியும் தொழும் தபோதனனே, இம்மைத் துயர்களைந்து இன்பமே அருள விபூதி தந்து திருவடியருள்க.

## 31.

| | | | | |
|---|---|---|---|---|
| தனனஎன்(று) | ஆடிடும் | தோகை | அடியைத் | தரிசித்துமே |
| மனனம்செய் | அன்பர் | மகிழ்கீர்த்தி | சீர்த்தியும் | வான்பொருளும் |
| புனல்நந்து | தாமரைப் | பொன்னடிப் | போதும் | புரிந்(து)இனிமேல் |
| சனனம் | தராதருள் | குன்றக் | குடியான் | சகோதரனே. |

**கூட்டுமுறை** : குன்றக்குடியான் சகோதரனே, தனன... அருள் என்று முடிக்க.

**குறிப்புரை** : மனனம் செய் = மனத்தில் நிலையாக நிறுத்தும். நந்து = வளரும். புரிந்து = தரவிரும்பி.

**பொழிப்புரை** : குன்றக்குடி அருள்தரு சண்முகநாதப் பெருமானுக்கு மூத்த உடன் பிறப்பாகிய அருள்தரு தோகையடி விநாயகப் பெருமானே, "தனன" என்கிற தாளம் பிழையாமல் ஆடும் மயிலின் வடிவான மயின் மலை அடிவாரத்தில் எழுந்தருளி அருள் வழங்கும் உன்னை வணங்கி, நிலையாக மனத்தில் நிறுத்தும் அடியார் மகிழ, அடியவர்களுக்குப் புகழும், சிறப்பும், மேலான பொருள்களும், நீரில் வளரும் தாமரைமலர் போன்ற உன் திருவடிகளையும் தரவிரும்பி, மேலும் பிறவிதராது பேரின்ப நிலையை அருள்வாயாக.

**விளக்கம்** :

**தாமரைப்பொன் அடிப்போது** : பெருமானின் திருவடித் தாமரைகள் இம்மை இன்பம் மறுமைப் பேறு இரண்டும்



தரவல்லனவாதலின் அவை இரண்டிற்கும் இடையில் பொன்னடிப் போதினை வைத்தார்.

மலரும் பக்குவத்தது போது எனப்படும். (மலரும் பொழுதை எதிர் நோக்கியிருப்பது). இது ஞாயிற்றொளி தீண்ட மலர்ந்து தேன் சுரப்பது. பெருமான் திருவடித்தாமரைப் போது என்றதனால் அடியவர் மனத்தால் தீண்டிய அளவில் மலர்ந்து பேரின்பத் தேனை வாரி வழங்குவது என்க.

"சிந்திப் பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன" – அப்பர்.

என்பது திருமுறை.

**திருச்சிற்றம்பலம்**

# செய்யுள் முதற்குறிப்பு (அகர வரிசை)

| வ.எண் | பா | பாட்டெண் |
|---|---|---|
| 1. | அடியார் அடி | 3 |
| 2. | அறிவு அதற்கு | 12 |
| 3. | ஆனனம் ஐந்தும் | 21 |
| 4. | ஆனைமுகப் | 5 |
| 5. | இணைக் குங்கும | 27 |
| 6. | இனிதாம் கதலி | 10 |
| 7. | ஈயாத லோபிகள் | 18 |
| 8. | உண்மை அறிந்தவர் | 7 |
| 9. | சார்ந்தவர் | 23 |
| 10. | சிந்தித்த சேயர் | 24 |
| 11. | சின்னஞ் சிறு | 6 |
| 12. | சுந்தரச் செவ்வேல் | 25 |
| 13. | சூரியனே பலகோடி | 29 |
| 14. | சொல்லும் திரு | 11 |
| 15. | சோதிப்பது என்னை | 14 |
| 16. | தந்தம் தரளம் | 9 |
| 17. | தனன என்று | 31 |
| 18. | தேசிகனே திருத் | 2 |
| 19. | நாயனே தன்னை | 16 |
| 20. | நிலையற்ற வாழ்வினை | 8 |
| 21. | நின்றே வணங்கிலன் | 17 |
| 22. | பதிக்கே வருகிலன் | 4 |
| 23. | பாலப் பருவ | 15 |
| 24. | புல்லாகிப் பூடாய் | 13 |
| 25. | மாணிக்க வல்லி | 26 |
| 26. | முகம் பார்த்தருள | 28 |
| 27. | முத்திக்கு வித்தே | 1 |
| 28. | வாகன் அதோமுகன் | 20 |
| 29. | வாமனம் தன்னை | 22 |
| 30. | வியாதியும் தீதும் | 30 |
| 31. | விளங்கும் கரிமுகம் | 19 |